வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
26°c 28°c

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 294 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 31, திங்கள் 16.09.2013

## தமிழகத்துடன் இணைந்தே செயற்படுவோம்

### முதலமைச்சர் வேட்பாளர் விக்கி உறுதி



யாழ்ப்பாணம், செப். 16
கூட்டமைப்பின் வசம் வடமாகாண சபை ஆட்சி வந்தவுடன் தமிழகத்துடன் இணைந்து பல்வேறு உதவிகளையும் நன்மைகளையும் பெற்று நெருக்கமாகச் செயற்படவுள்ளோம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழகத்தில் நடைபெற்ற போராட்டங்களால் எமக்கு ஏராளமான நன்மைகள் கிடைத்திருந்தன என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந் திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் 'ஹிந்து' பத்திரிகைக்கு நான் வழங்கிய நேர்காணல் தவறான அர்த்தப் படுத்தலுடன் வெளியாகியுள்ளது. இந்தப் பத்திரிகையின் ஊடகவியலாளர் என்னிடம் பத்துக் கேள்விகள் வரையில் கேட்டபோதும் அதனை பிரசுரிக்காது, சர்சைக்குரிய கருத்துக்

25

## கூட்டமைப்பின் கூட்டம் நேற்றும் குழப்பப்பட்டது

### கொல்லன்கலட்டியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 16
தெல்லிப்பழை, கொல்லன்கலட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை சிவில் உடையில் வந்த சிலர் தடுத்து நிறுத்தியுள்ளனர். எனினும் அதன் பின்னர் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தலையிட்டதால் கூட்டம் தொடர்ந்து இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டம், கொல்லன்கலட்டி மடத்தடிப் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான பா.கஜதீபன், த.சித்தார்த்தன் ஆகியோர்

25




ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-6)

# ஏற்கமுடியாத தீர்வினை திணிக்க அனுமதியோம்

## சம்பந்தன் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், செப். 16
தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத எந்தவொரு அரசியல் தீர்வையும் இலங்கை அரசு எம் மீது திணிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தென்னிலங்கை பேரினவாதிகள் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் கடுமையாக விமர் சித்து வருகின்றனர்.

25

## இன்னும் அதிக இராணுவத்தினர் வடக்கில் பணிபுரிய வேண்டும்

### ஹத்துருசிங்க கருத்து

கொழும்பு, செப்.16
"புனர்வாழ்வு பெற்றுக் கொள்ளாமல் மக்களோடு மக்களாக வாழும் 4 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ச்சிகரமான அரசியல் நடவடிக்கை மூலம் உசுப்பேற்றி வருகிறது. இதனால் வடக்கில் இராணுவ முகாம்களை மூடுவதை விடுத்து இன்னும் அதிக இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்று பாதுகாப்புச் செயலரிடம் கோரவுள்ளேன்" என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல்



ஹத்துரு சிங்க.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

25

## மக்களின் ஆணை கிடைத்தால் இராணுவத்தை வெளியேற்றுவோம்

### சூளுரைத்தார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், செப்.16
எங்களின் மக்களுக்கு தேவையில்லாத இராணுவம் எம்மவர்களை அடக்கியாள இங்கு இருக்க முடியாது. மக்கள் ஆணை கிடைத்தால், நாங்கள் அவர்களை வெளியேற்றுவோம் எனத் தெரி வித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் க.வி.விக்னேஸ்வரன், அதிகாரங்கள் வழங்க மறுத்தால் மீண்டும் ஆயுதம் ஏந்தக் கூடிய நிலைமையும் வரலாம் என்றும் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபைச் சட்டங்களின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு மத்திய அரசு நிதி வழங்க வேண்டும். இவ்வாறு வழங்காமல் விடுவது என்பது சட்டத்துக்கு புறம்பானது.

25


## சர்வதேசப் பிரதிநிதிகள் வடக்குக்கு வருவர்

யாழ்ப்பாணம், செப். 16
வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைகள் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இந்த வாரம் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் வடமாகாணத்துக்கு வருகை தந்து நிலைமை

25

புலம் பெயர்ந்த தமிழர்களின் அன்பான வேண்டுகோள் :
ஆதரியுங்கள் திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்) இலக்கம் :1

அனந்தி தமிழ் இனத்தின் உரிமைக்குரல்!
அனந்தி பாதிக்கப்பட்டோரின் உணர்ச்சிக்குரல்!!
அனந்தி தாய்க்குலத்தின் வீரக்குரல்!!!
X 1
யாழ் மாவட்டம்
முப்பது வருட கால போராட்டத்தின் தியாகங்கள் வீண் போகக் கூடாது !


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்

X 5 5
வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்
(சி-11268)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தூதர்கள் வடக்குக்குச் செல்லத்தடை

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,செப்.16
வடக்கு மாகாணத்துக்கான பயணங்களைத் தவிர்க்குமாறு வெளிநாட்டுத் தூதர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரியுள்ளார்.
ஆஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் நோர்வே தூதர்கள் வட மாகாணத்துக்குப் பயணம் செய்ய அனுமதி கோரியுள்ளனர்.
வட மாகாண மாவட்டச் செயலர்களைச் சந்திக்க அனுமதியளிக்குமாறு குறித்த தூதர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
எனினும், இந்தக் கோரிக்கையை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.
வட மாகாணத் தேர்தல் குறித்து ஆராயும் நோக்கில் அவர்கள் அனுமதி கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக தேர்தல்கள் திணைக்களத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.
மிகவும் அத்தியாவசியமான தேவை ஒன்றுக்காகச் சந்திப்பு நடத்தப்பட்டால் அது மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளின் முன்னிலையிலேயே நடைபெற வேண்டும் என்று மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். (ச)



# தேர்தல் பரப்புரை புதனுடன் முடிவு

கொழும்பு,செப்.16
மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் பரப்புரைகள் அனைத்தும் நாளைமறுதினம் புதன்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
வடக்கு, வடமேல், மத்திய மாகாணசபைகளுக்கான தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கும், அரசியல் விளம்பரங்கள் மற்றும் அறிக்கைளை வெளியிடுவதற்கும், ஒலிபரப்பவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தேர்தல் தொடர்பாக அரசியல்கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் அல்லது வேட்பாளர்களால் வெளியிடப்படும் எந்தவொரு பரப்புரைகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
நாளைமறுதினம் புதன்கிழமை நள்ளிரவு 12 மணியிலிருந்து தேர்தல் முடியும் வரை அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ச)

# உயர்தரப் பரீட்சையின் 3 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் 25 இல் ஆரம்பம்



கொழும்பு,செப்.16
உயர்தரப் பரீட்சையின் மூன்றாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி நிறைவுபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம். என்.ஜே. புஸ்பகுமார கூறினார்.
மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதால் மூன்றாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த தினத் தில் ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது.
உயர்தரப் பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதியுடன் நிறைவுபெற்றது.
கடந்த மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த வியாழக்கிழமை நிறைவுபெற்றது.
உயர்தரப் பரீட்சையின் செயல்முறை பரீட்சைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்தனர் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு,செப்.16
மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் கண்காணிப் பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை சந்தித்துள்ளனர்.
இந்தச் சந்திப்பு தேர்தல்கள் திணைக்களத்தில் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது என்று தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தச் சந்திப்பின்போது தேர்தல் ஒழுங்கு விதிகள், மாகாண சபைகளின் வரலாறு மற்றும் புவியல் தரவுகள் உள்ளிட்ட விடயங்களை தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தியுள்ளார். சர்வதேச கண்காணிப்பாளர்கள் 13 பேர் இரண்டு குழுக்களாகவே கடந்த 13 ஆம், 14ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தந்தனர்.
அவர்கள் வடக்கு, மத்திய, வட மேல் மாகாணசபை தேர்தல்களையே கண்காணிக்கவுள்ளனர்.
தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மீண்டும் ஹலாலுக்கு எதிராகப் போராட்டம்

## பொது பல சேனா எச்சரிக்கை



ஹலாலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் கண்டியில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம்.

கொழும்பு,செப்.16
ஹலால் சான்றிதழ் தொடர்பாக எமக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு நிறைவேற்றத் தவறியதால், ஹலாலுக்கு எதிரான போராட்டம் மீள ஆரம்பிக்கப்படும் என்று சிங்கள பௌத்த அடிப்படைவாதஅமைப்பான பொது பல சேனா எச்சரித்துள்ளது.
இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பொது பல சேனாவின் பொதுச்செயலர் வணகலபொடதத்த ஞான சார தேரர், இந்த விவகாரத்தைக் கவனித்துக் கொள்வதாக இலங்கை அரசு வாக்குறுதி அளித்ததையடுத்தும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதையடுத்தும், ஹலாலுக்கு எதிரான பரப்புரைகளை நிறுத்தியிருந்தோம்.
எமது உறுப்பினர்கள் தெரிவுக்குழு முன்தோன்றி சாட்சியமளித்தனர். ஆனால் எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை.
விரைவில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷவை சந்திப்போம். அதற்குப் பின்னர், ஹலால் சான்றிதழ் நடைமுறைக்கு எதிரான பரப்புரைகளை மீளத் தொடங்குவது குறித்து முடிவெடுப்போம்.
இந்த மாத இறுதியில் கண்டியில் சாகும்வரை உண் ணாவிரதப் போராட்டத்தை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (ச)

# தெஹிவளை மிருகங்கள் அம்பாந்தோட்டைக்கு மாற்றம்

கொழும்பு,செப்.16
பொதுநலவாய நாடுகள் மாநாட்டுக்காக தெஹிவளை மிருகக் காட்சிசாலை மிருகங்கள் ஹம்பாந்தோட்டைக்கு மாற்றப்படவுள்ளன.
சிங்கங்கள், ஜகுவார், கரடிகள், ஒட்டகச்சிவிங்கி, குதிரைகள் உள்ளிட்ட 25 மிருகங்கள் இவ்வாறு மாற்றப்படவுள்ளன.
மிருகங்களை எடுத்துச் செல்வதற்கான விசேட கூடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.
மிருகக்காட்சிச்சாலைக்கு சொந்தமான இடத்துக்கு மட்டுமே மிருகங்களை மாற்ற முடியும் என்று சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.
மிருகங்களுக்குத் தேவையான மருத்துவ மற்றும் ஏனைய வசதிகள் குறித்த இடத்தில் காணப்படுகின்றதா என்பது கேள்விக் குறியே என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ச)

# பொதுநலவாய மாநாட்டுக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு,செப்.16
எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டை முன்னிட்டு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
தலைநகர் கொழும்பில் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
தொடர்பாடல் நிலையங்கள், இந்தியா, பாகிஸ்தானியர்கள் தங்கியிருக்கும் விடுதிகள் உள்ளிட்ட இடங்கள் முதல் கட்டமாக சோதனையிடப்பட்டு வருகின்றன என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.
பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு முதல் கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினர்.
உலகத் தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் இரண்டாம் கட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டவுள்ளன. சில தரப்பினர் குழப்பங் களை ஏற்படுத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
உள்நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு நிறுவனங்கள் கூட்டாக இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)


# மானிப்பாயில்...

பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனைக் காட்சியறை திறப்பு விழா
டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின் சேவை முகவர்

BAJAJ

றஞ்சிற் மோட்டோர்ஸ்






இன்று (16.09.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு மானிப்பாயில் தமது காட்சியறையை திறந்து சேவையை ஆரம்பிக்கின்றனர். எம்மிடம் வாங்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு வழமையான இலவச சேவிஸ்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு சேவிஸ் எம்மால் செய்து கொடுக்கப்படும். அன்றைய தினம் கொள்வனவு செய்பவர்களுக்கு பின்வரும் பொருள்கள் இலவசம்

01. எலக்ரிக் றைஸ்குக்கர் 02. ஒரு சோடி பின் பிரேக் சூ 03. முன் பிறேக் சூ 04. ஹெல்மெற் 05. ஒயில் கான் 06. ஜக்கெற்

077 3107549, 077 2269883, 0212255228

(C/12456) (3.6)

றஞ்சிற் மோட்டோர்ஸ்
றஞ்சிற் றிப்பயர் அன்ட் சேவிஸ் சென்ரர்,
யாழ். வீதி, மானிப்பாய்.


# சொத்துக்களை வெளியிடாத நபர்களுக்கு நடவடிக்கை

சொத்து விவரங்களை வெளியிடாதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். ஏ. ரட்நாயக்க தெரிவித்தார்.
சொத்து விவரங்களை வெளியிடத் தவறிய சிறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் வெற்றியீட்டினாலும் அவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்படமாட்டாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.
சொத்து விவரங்களை வெளி யிடும் வரை விருப்பு வாக்கு எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் அரச வர்த்தமானியில் அறிவிக்கப்படமாட்டாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
கடந்த வியாழக்கிழமைக்கு முன்னர் சொத்து விவரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (ச)

# பூநகரி, சின்னப்பல்லவராயன் கட்டில் 27 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள்

பூநகரி, செப். 16
பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சின்னப்பல்லவராயன் கட்டில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
பூநகரி சின்னப் பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் வசிக்கும் 48 குடும்பங்களுக்கு காணிகள் இனம் காணப்பட்ட நிலையில் முதற்கட்டமாக 27 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
இதற்கான ஏற்பாடுகளை பூநகரிப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.
சின்னப்பல்லவராயன்கட்டுக் கிராம மக்கள் நீண்ட காலமாக மேட்டுக் காணி வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் பூநகரிப் பிரதேச செயலகம் இவர்களுக்கான காணிகளை இனங் காட்டியுள்ளதுடன் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.
இதேவேளை, சின்னப்பல்லவராயன் கட்டு கிராமத்தில் வசிக்கும் மக்களின் வயல் காணி தொடர்பான பிணக்குகளும் நீண்ட காலமாகத் தீர்த்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. அதனையும் தீர்வுக்குக் கொண்டு வருவதற்குப் பிரதேச செய லகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாகாண சபை
# தேர்தல்
உதயன் சிறப்புக் கண்ணோட்டம்




உதயன் | செப்ரெம்பர் 16 2013 திங்கட்கிழமை | பக்கங்கள்: பன்னிரண்டு

# வடக்குத் தேர்தலைத் தடுப்பதற்கு முயற்சிக்கின்றனர் பேரினவாதிகள்

## குற்றம் சாட்டுகிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், செப்.16
தமிழர்களின் நிர்வாகத்தில் ஒரு மாகாண சபை உருவாகப் போகின்றது என்பதை ஏற்றுக் கொள்ளவும் சகிக்கவும்முடியாததென்னிலங்கை சிங்களப் பேரினவாதிகள் தேர்தலைத் தடை செய்தாவது நமது வெற்றியைத் தடுக்க முனைப்பாக இருக்கின்றனர். தேர்தலுக்கு இன்னும் சில தினங்களே இருக்கும் வேளையில் எப்படியாவது தேர்தல் நடைபெறாமல் தடுக்க பல முனைகளிலும் முயற்சிக்கின்றனர். 21 ஆம் திகதி வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த விடுவார்களா, நடக்குமா என்பதும் சந்தேகமாகவே இருக்கின்றது. எனவே நாம் விழிப்புடன்இருக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சரும் வேட்பாளருமான முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் மாலை உடுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில், எட்டு மாகாணங்கள் சிங்களவர்களின் நிர்வாகத்தில் இயங்குகின்றன. ஒன்பதாவது மாகாண சபை வடக்கில் தமிழர்களின் நிர்வாகத்தில் இயங்கப் போகின்றது.

இதில் நமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. வெற்றிப் பேரலை நம் பக்கம் வீசுகின்றது. வடக்குக்கு வந்து செல்லும் ஜனாதிபதி, அமைச்சர்கள் உட்பட சிங்களப் பேரினவாதிகளுக்கு அது பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியோ நாம் பின்வினையை தூண்டி, தனி நாடு கேட்பதாகக் கூறுகின்றார். பஸில் ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை மக்களை குழப்பிவிட சதி செய்கின்றது. அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் பிரபாகரனின் வழியில் செல்கின்றது; நாட்டைப் பிரித்துக் கேட்கின்றது என குற்றஞ்சாட்டுகின்றனர். ஹெல உறுமய மிகவும் தீவிரமாகச் செயற்படுகின்றது. நமது தேர்தல் விஞ்ஞாபனத்தை சட்டமா அதிபர் முன் கொண்டு சென்றுள்ளார் தேர்தல் ஆணையாளர்.

இவர்களுக்கு தமிழர்களின் வெற்றியை சகித்துக் கொள்ள முடியவில்லை. அதுதான் உண்மை. அன்று பிரபாகரன் தலைமையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டிருந்த போது அது ஆயுத முனையில் மக்களை திரட்டி பலவந்தமாகஏற்படுத்திக்கொண்ட தலைமை, அதனை ஏற்க முடியாது என்றனர்.

இன்று ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தி மக்களால் தெரிவு செய்யப்படும் ஒரு தமிழ் நிர்வாகத்தைக் கூட ஏற்கும் துணிவு இவர்களுக்கு சிறிதும் இல்லை.



தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். அரசின் அபிவிருத்திகளை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் எம்முடனேயே இருக்கின்றனர் என ஜனாதிபதி சர்வதேசத்துக்குக் கூறுகின்றார்.

போர் முடிந்த பின் தமிழ் மக்களின் நிலை என்ன? இலங்கை அரசு தமிழ் மக்களை எப்படி நடத்துகின்றது? சிங்கள மக்களைப் போன்று தமிழர்களும் சமத்துவமாக நடத்தப்படுகின்றனரா? இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டுள்ளதா? தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா? அரசு கூறுவது போல் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனரா? போன்ற கேள்விகளுடன் சர்வதேசம் இலங்கையை அவதானித்துக் கொண்டிருக்கின்றது. நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் நீங்கள் அளிக்கப் போகும் தீர்ப்புத்தான் தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்றது. இலங்கை அரசு கூறுவது சரியா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் கூறுவது சரியா என்பதை தீர்மானிக்கும் தருணம் வந்துவிட்டது. தொடர்ந்தும் நாம் அடிமைகளாகத் தான் வாழப் போகின்றோமா? சர்வதேசம் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றது. அமோக வெற்றியுடன் வாருங்கள்; உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்யத் தயார் என்று உறுதியளித்துள்ளது. எனவே எந்தவிதமான அச்சமும் இன்றி நாம் அனைவரும் ஒட்டு மொத்தமாக வாக்களிக்க வேண்டும். குறிப்பாகப் பெண்கள் கட்டாயமாக வாக்களிக்கத் தவறக் கூடாது. நீங்கள் அளிக்கும் வாக்குகள் மூலம் அறுதியான வெற்றியைப் பெற்று உலகுக்கு நம் தமிழ்த் தேசியஉணர்வுகளைவெளிப் படுத்துவோம்- என்றார். (ஐ-2)



# வீதியும் பாலமும் அபிவிருத்தி அல்ல

## ஆளும் தரப்பு வேட்பாளர் அங்கஜன் கூறுகிறார்

அக்கராயன், செப்.16
வீதிகளைப் புனரமைப்பதும் மின்சாரம் வழங்குவதும் உண்மையான அபிவிருத்தியல்ல. மாறாக அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்வில் ஏற்படும் வாழ்வாதார முன்னேற்றமே.

இவ்வாறு ஆளும் தரப்பு வேட்பாளர் அங்கஜன் தெரிவித்தார்.

நல்லூர் கிழக்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுடன் இணைந்த அரசியல் செய்ய நிறைய பேர் உள்ளனர். இணக்க அரசியல் செய்யவும் பல பேர் உள்ளனர். ஆனால் மக்களுடன் இணைந்து மக்கள் பிரதிநிதியாகச் செயற்பட எவரும் முன்வருவதில்லை. மக்களோடு இருந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவே நான் அரசியல் செய்கின்றேன்.

எமது முக்கிய நோக்கம் மக்களின் சுய அபிவிருத்தி மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பணிகளைச் செய்தாலும் எனக்கொரு ஏக்கம் உண்டு. அது பிரதேச அபிவிருத்திக்கு நான் உதவவில்லை என்பதே. இந்தக் குறையையும் மாகாண சபை ஊடாக நிறைவேற்ற விரும்புகின்றேன்.

127 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முதலாக தமிழ் மக்கள் தம்மை தாமே ஆள்கின்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மாகாண சபையூடாக அபிவிருத்தி ஏற்படப் போகிறது. எல்லோரும் பேசும் அபிவிருத்தி பற்றி நான் பேசவில்லை.

காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, ஏ-9 வீதி என்பனபுனரமைக்கப்பட்டமையோ மின்சாரம் வழங்கப்பட்டமையோ அபிவிருத்தி அல்ல. நான் கூறும் அபிவிருத்தி நகரில் கிடைக்கும் வசதிகள் அனைத்தும் கிராமங்களிலும் கிடைக்க வேண்டும் என்பதே. மாகாண சபையில் நான் தெரிவு செய்யப்பட்டால் மேற்படி அபிவிருத்தியைத் தான் செய்வேன். நான் அரசியலுக்கு வந்தது உழைப்பதற்காக அல்ல. சேவை செய்யவே- என்றார். (ஐ-18)

# ஈழத் தமிழர்களின் பிரச்சினையை வாக்குகளால் வெளிப்படுத்துவோம்

## பாஷையூரில் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன்

கொழும்புத்துறை, செப்.16
வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவுள்ளனர். இதனையே சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருக்கிறது. எனவே நாம் எமது உரிமைகளை மீளப் பெற வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் பாஷையூரில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது வாய்மூல அறிக்கையை ஐ.நா. வில் சமர்ப்பிக்கவுள்ளார். அடுத்த பங்குனியில் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பித்து அதன் மீதான விவாதங்கள் இடம் பெறவுள்ளன. இவ்வாறான சர்வதேச கவனிப்புக்களுக்கு வடமாகாண சபைத் தேர்தல் முடிவுவலுச்சேர்ப்பதாக அமையவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் அரசுடன் பேச்சு நடத்தியிருக்கிறது. எழுத்து மூலமாக எமது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறோம். ஆனால் அரசு இவற்றுக்கு விசுவாசமாக செயற்படவில்லை. காலத்தை இழுத்தடித்து எம்மை ஏமாற்றவே முயற்சிக்கிறது.

இந்த நிலை காரணமாகவே நாம் சர்வதேசத்திடம் சென்றோம். நாம் மீண்டும் ஒரு வன்முறை ஏற்பட விரும்பவில்லை. மக்கள் சமாதானத்துடனும் உரிமையுடனும் வாழ வேண்டும். அதற்கு அதிகாரம் பகிரப்பட்டு தமிழ் மக்களுக்கு அரசியல் தலை விதியை தாமே நிர்ணயிக்கக் கூடிய அரசியல் அதிகாரம் அமைய வேண்டும். சர்வதேசத்திடம் இந்த விடயத்தை நீங்கள் உங்கள் வாக்குகள் மூலம் வெளிப்படுத்துங்கள். எமது கரங்களைப் பலப்படுத்தி எதிர்காலத்தில் எமது இலக்கை முன்னெடுத்துச் செல்ல உங்கள் வீட்டில் நீங்கள் [illegible] வாக்களித்து விடிவுக்கு வழி கோலுங்கள்- என்றார். (ஐ-135)

# அம்பாறை இளைஞர் அணியினர் வடக்கில் தேர்தல் பரப்புரையில்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக

அம்பாறை, செப்.16
வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காகவும் கூட்டமைப்புக்கு ஆதரவு திரட்டுவதற்காகவும் அம்பாறை மாவட்டத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான கூட்டமைப்புப் பிரமுகர்கள் வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.

கூட்டமைப்புப் பிரமுகரும் காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா தலைமையில் இளைஞர் அணி ஒன்று வருகை தந்து வடக்கின் பல பிரதேசங்களில் மக்களை வீடு வீடாகச் சென்று சந்தித்து பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன் வாக்களிப்பு முறை வாக்களிப்பின் அவசியம் பற்றியும் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேபோல் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரபல தொழிற் சங்கமான அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் வடக்கில் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே ஆதரிப்பதென பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் ஒன்று கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பான எழுத்து மூலப் பிரதிகளை சங்கத்தின் தலைவர், யாழ். மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டக் கிளை முக்கியஸ்தர்கள் சகிதம் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரிடம் நேரில் கையளித்தார். (ஒ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கப்போவது தேர்தலே அல்ல; எம் உரிமைப் போராட்டக் களம் அது

## முல்லைத்தீவு வேட்பாளர் சிவநேசன்

வடமாகாண சபைத் தேர்தல் என்பது நாம் வாக்களிக்கும் சாதாரண தேர்தலே அல்ல. இது எமது உரிமைக்கான போராட்டத்துக்கான களம். போராட்டம் என்றவுடன் ஆயுதம் ஏந்து வதாக அர்த் தப்படுத்தக்கூடாது. நாம் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து போராட்டத்துக்குப் பலம் சேர்ப்போம். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பு சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் க.சிவநேசன்.

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தத் தேர்தலானது மாற்றுக் கட்சியினர் கூறுவது போல் ஒருசாதாரணதேர்தலே அல்ல. வேலைவாய்ப்பு. உதவிபொருள் பெற்றுத் தருவதாக பசப்பு பேச்சு பேசுபவர்கள்.தாம் தோற்கப் போவதை எண்ணி இந்த தேர்தலை மக்கள் மத்தியில் தவறாகக் காட்ட முற்படுகின்றனர்.மக்கள் இதுவிடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தம் மூலம் ஒன்பது மாகாணங்களிலும் 1987 இல் இருந்து மாகாண சபைத் தேர்தல் நடைமுறைகள் இருந்தாலும் வடமாகாணசபைத் தேர்தல் மட்டும் இழுத்தடிக் கப்பட்டிருக்கின்றது. இந்த இழுத்தடிப்புக்கான காரணத்தை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்களுடைய ஆயுதப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தபோது அன்றைய காலப் பகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இனிமேலும் தமிழர்களை ஏமாற்ற முடியாது என்று இந்தியா விடம் சரணடைந்து அவர்களின் உதவியுடன் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டார். இதன்போது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாடு உருவானது. இதனைச் சிதைக் கவே சிங்களக் கட்சிகளும் அரசியல்வாதி களும் பெரும்பாடுபட்டுவருகின்றனர். ஜன நாயக விதிமுறை களை மீறிய நிலையில் இந்தத் தேர்தல் நடைபெற்றாலும் இவை எல்லாவற் றையும் உடைத்தெறிந்து எங்கள் உரிமைக் கான போரில் வெற்றி பெறவேண்டும். வீட்டுச் சின் னத்துக்குவாக்களிப்போம்-என்றார். (ஐ-6)

வடமாகாண சபைத் தேர்தல் 2013

எதிர்க்கத் துணிந்தால் தமிழ் மீளும்
எதற்கும் துணிந்தால் தமிழ் ஆளும்
X 17
பா.கஜதீபன் (ஆசிரியர்)
ஆனைவிழுந்தான் சதாசிவம் மகாவித்தியாலயம்,
தலைவர் யாழ் மாவட்ட இளைஞர் அணி.
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


காரைநகர் பிரதேச சபையில் இருந்து
வடமாகாண சபைக்குத் தெரிவுசெய்வோம்
11 X
பாலா

ஐக்கிய தேசியக் கட்சி
செயற்குழு உறுப்பினர்,
காரைநகர்
பிரதேச சபை உறுப்பினர்,
அகில இலங்கை
சமாதான நீதிவான்
X
வெற்றிபெறச் செய்யுங்கள்

வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்
ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
வடக்கில் உள்ள
ஒவ்வொரு பெண்ணுக்கும்
உரிமைக்கும் சலுகைக்கும்
வித்தியாசம் தெரியும்.
பெண் தலைமைத்துவ
மேம்பாட்டுக்காக எனது குரல்
தொடர்ந்து ஓங்கி
ஒலித்துக் கொண்டிருக்கும்

X 4
கே. வினுபானந்தகுமாரி (ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

வடமாகாண சபைத் தேர்தல்
யாழ்மாவட்டம்
எம் மக்களுக்காக...
சாத்தியமானவற்றை
சாதிக்கவும் முடியாதவற்றை
முயற்சிக்கவும்

கனகரஞ்சிதன்
பிரணவன்
X 12X
எதிர்கால அரசியலுக்காக
இளைஞர்களுக்கு வாக்களிப்போம்

வடக்கு மாகாணசபைத்
தேர்தல் - 2013
மாணிக்கசோதி
அபிமன்னசிங்கம்

14
(மல்லாகம்ஈர்வி)
சுயேச்சைக் குழு - 6


ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா

முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
(ச/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு

-யாழ் மாவட்டம்-
வட மாகாணசபைத் தேர்தல் – 2013
"எல்லா வகையிலும் அடக்கி ஒடுக்கப்படும்
தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளையும்
யாசித்து பெறமுடியாது,
போராடித்தான் வென்றெடுக்க முடியும்" என
துணிச்சல் மிக்க போராளியாக....
திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்)
பிரதம முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – கிளிநொச்சி
இணைப்பாளர், காணாமல்போனோர் உறவினர்கள் சங்கம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 1

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!
தமிழ் இனப் படுகொலைகளுக்காக
வெளிப்படையான சர்வதேச
நீதி விசாரணை தேவை என
முக்கிய தமிழர் எம்.கே.சிவாஜி
லிங்கம் பகிரங்கமாக
வலியுறுத்தும் ஒரே ஆளாக
இருப்பதாக அமெரிக்கத் தூதுவர்
தனது நாட்டின் வாஷிங்டன்
நகருக்கு 15.01.2010 இல்
அனுப்பி வைத்த செய்தியில்
குறிப்பிடப்பிட்டிருந்ததாக
விக்கி லீக்ஸ் இணையத்தளம்
செய்தி வெளியிட்டிருந்தது
குறிப்பிடத்தக்கது.

X 9
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | | | | | | | X | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான
ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை
வெற்றி பெறச் செய்வோம்.
* தேசியம் * தாயகம் * சுயநிர்ணய உரிமை

வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
யாழ் மாவட்டம் (இலங்கை தமிழரசுக் கட்சி)

சீ.வீ.கே. சிவஞானம்
துணைப் பொதுச் செயலாளர்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
ஓய்வு நிலை மாநகர ஆணையாளர்
பட்டயச் செயலாளர்
X 8
உங்களுக்குத் தெரிந்தவர்
உங்களைத் தெரிந்தவர்
உங்களோடு வாழ்பவர்
சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான அரசியல் கூட்டமைப்பு புத்தளத்தில் ஏற்பாடு செய்திருந்த முஸ்லிம் மக்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை புத்தளம், தில்லையடி அம்மார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சூறாசபை அமீர் அஷ்ஷெய்க் எம்.பி.எம். பிர்தௌஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர் ஐயூப் அஸ்மின் மற்றும் புத்தளம் பிரதேச பள்ளிவாசல் தலைவர்கள், உலமாக்கள், கல்விமான்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# தன்மானத் தமிழர்கள் நாம் என்பதை ஜனாதிபதிக்கு உணர்த்த வேண்டும்

## உடுத்துறைக் கூட்டத்தில் சுமந்திரன் அறைகூவல்

யாழ்ப்பாணம், செப்.16

கொள்கைக்காக வாக்களிக்க வேண்டாம் எங்களின் அபிவிருத்திக்கு வாக்களியுங்கள் என்று தமிழ் மக்களை கேவலப்படுத்துகின்றார் இந்த நாட்டின் ஜனாதிபதி. வீதிகள் பாலங்களுக்காக வாக்களிக்க தமிழ் மக்கள் எவரும் முட்டாள்கள் இல்லை.

உயரிய நோக்குடனும் சீரிய சிந்தனையுடனும் அசைக்க முடியாத கொள்கையுடனும் வாழ்பவர்கள் தன்மானத் தமிழர்கள். இதனை நாம் ஜனாதிபதிக்கு உணர்த்த வேண்டும் என அறைகூவல் விடுக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன். நேற்றுமுன்தினம் உடுத்துறையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று முன்தினம் ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரை ரயிலில் வந்து இறங்கிய ஜனாதிபதி தமிழ் மக்கள் தமது கொள்கைகளை அடகு வைக்க வேண்டும் என்ற தோரணையில் கூறிஉள்ளார். நாம் எல்லோரும் ஒரே மக்கள். ஒரே இனம். ஒன்றாக வாழ்வோம். ஒற்றுமைப்படுவோம். நீங்கள் கொள்கைக்காக வாக்களிக்க வேண்டாம். எங்களுடைய அபிவிருத்திக்கு வாக்குப் போட வேண்டும் என எவரோ எழுதிக் கொடுத்ததை கொச்சைத் தமிழில் கூறியுள்ளார். இவை அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.

ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில் தனது மக்களைப் பார்த்து "நீங்கள் ஒரு கொள்கையுடன் வாழ வேண்டாம்" என்று கூறிஇருப்பது வேடிக்கையானது.

ஒரு சில அடிவருடிகளைப் போல் சந்தர்ப்பவாதிகளைப் போல் தமது கொள்கைகளை விற்றுப் பிழைப்பவர்கள் அல்லர் தமிழர்கள்.

கொள்கையுடன் வாழ்பவர்கள். இன அடையாளத்தை அடகு வைப்பவர்கள் தமிழர்கள் அல்ல. நாம் சர்வதேச சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையைத்தான் கேட்கின்றோம். மக்களின் இந்த உணர்வுகளை மதிக்காத ஜனாதிபதி எம்மைக் கேவலப்படுத்தி விட்டுப் போய்விட்டார்.

இன்று நடைபெறும் இந்தக் கூட்டத்தை நடத்தவிடாமல் தடுக்க ஆளுந்தரப்பினர் நேரடியாகவே பல சதிவேலைகளைச் செய்துள்ளனர்.

அனுமதி பெறப்பட்டு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், பாரதி சனசமூக நிலையத் தலைவரை பலவந்தப்படுத்தி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று அனுமதியை மீளப் பெறச் செய்துள்ளார். இதுதான் சிலரின் இணக்க அரசியல். இவ்வளவு தடைகளையும் மீறி வீர இளைஞர்கள் இந்தக் கூட்டத்தை நடத்துகின்றனர். அவர்களின் துணிவைப் பாராட்டுகின்றேன். மக்கள் ஆதரவு எப்போதும் கூட்டமைப்புக்கு உள்ளது. எனவே நீங்கள் அனைவரும் 21 ஆம் திகதி அணி அணியாகச் சென்று வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் இந்த அடாவடி அரசியல் கும்பல்களிடம் இருந்து உங்களை மீட்டு எடுக்க முடியும் - என்றார். (ஜ-02)

**தேர்தல் கண்காணிப்பு அலுவலகங்கள்**
**பவ்ரல்**

**யாழ்ப்பாணம்:**
இல.81, குருசோ றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0724 965396

**கிளிநொச்சி:**
இல.01, அம்பாள்குளம்,
கிளிநொச்சி.
தொ.பே: 077 391 3970

**மன்னார்:**
இல.78/1, எஸ்பிளானட் றோட்,
மன்னார்.
தொ.பே: 077 692 4547

**முல்லைத்தீவு:**
சென் மத்தியூஸ் தேவாலய வீதி,
தண்ணீரூற்று
தொ.பே: 077 3297604

**வவுனியா:**
இல. 73D, 2ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.
தொ.பே: 077 603 4650

# தமிழ் மக்களை நசுக்கி வரும் அரசுக்கு பாடம் புகட்டுவோம்

## வேட்பாளர் ஆனல்ட் கோரிக்கை

கொழும்புத்துறை, செப்.16

தமிழர் பகுதியில் தமிழரசு அமைய வேண்டும் என்று போராடிய எமது உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையில் அரச பயங்கரவாதம் எம்மை பல வழிகளிலும் நசுக்கி வருகிறது. அடிமைகளாகவும் ஏதிலிகளாகவும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலை மாற மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பது ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும்.




இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஆனல்ட்.

பாஷையூரில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தல் மூலம் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தெளிவுபடுத்த வேண்டும். தேசிய உணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

தனித்துவமான தமிழரசுக் கட்சியின் பாரம்பரிய சின்னமாகிய வீட்டுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இதுவே தமிழ் மக்களது கடமையாக இன்று உள்ளது - என்றார். (ஜ-135)

வட மாகாண சபைத் தேர்தல் - 2013

யாழ் மாவட்டம்
தமிழரசுக் கட்சி
வேட்பாளர்



கடமைகளை கண்ணியமாக செய்யும் நண்பா
களத்திலும் கண்ணியமாக செயல்பட்டு
தமிழன் என்ற உரிமையை
உலகுக்கு தெரியப்படுத்து

X 5

இம்மானுவல் ஆனல்ட்
[B.A (Phil) Hons, MSS Limra International (USA), AMTC Limra International (USA)
(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர்,
முன்னாள் யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவரும்,
விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
www.emmanuvelarnold.blogsport.com

பொங்குதமிழ் நாயகன்
வெற்றி பெற எங்கள் வாழ்த்துக்கள் ஊழியர், நண்பர்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வட மாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
எவருக்கும் அஞ்சாமல் எப்போதும்
நீதியுடன் மக்களுக்காக
குரல் கொடுத்த
வீ.ஆனந்தசங்கரி



தமிழரசுக் கட்சி X 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை நிர்வாகத்தில் கொத்தடிமைகளாக அதிகாரிகள்

## அவர்களை மீட்டெடுப்போம் என்கிறார் சி.வீ.கே.

வடமாகாண சபை நிர்வாகம், தற்போது அதன் அதிகாரிகள் உத்தியோகத்தர்களை கொத்தடிமைகளாகவே பயன்படுத்துகிறது. இந்த ஆபத்தில் இருந்து அரச உத்தியோகத்தர்களையும், அதிகாரிகளையும் மீட்டெடுக்க வேண்டும். இதற்கான ஒரேயொரு வாய்ப்பு வடமாகாண சபைத் தேர்தல்தான்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சீ.வீ.கே.சிவ ஞானம். நாவாந்துறையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு நிர்வாக அதிகாரிகள் தற்போது அரசியல் பழிவாங்கல்கள், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இதிலிருந்து விடுபட்டு மக்களுக்காக சேவையாற்றவேண்டும். அது இப்போதுள்ள நிர்வாகத்தில் சாத்தியம் இல்லை. வட மாகாண சபை நிர்வாகம் தமிழ் மக்களுடைய கைகளுக்கு வரவேண்டும்.

இப்போது, அரசியல் செய்ய வேண்டாம் அரசியலில் பங்கெடுக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டு ஒவ்வொரு இடங்களி லும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களைக் கூப்பிட்டு அரசியல் செய்கின்ற ஒரு சூழ் நிலையே உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங் கள் எல்லா உத்தியோகத்தர்களுக்கும் துணையாக நிற்போம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அரச தரப்பினர் ஒவ்வொரு இடங்களிலும் ஏதாவது ஒரு சாட்டைச் சொல்லி கலந்துரையாடல் என்ற போர்வையில் அரச அதிகாரிகளைக் அழைத்து, அச்சுறுத்தி தங்களுக்கு சாதகமாகச் செயற்பட வேண்டும். கூட்டமைப்பிற்கு வாக்களிக்கக் கூடாது என்று எச்சரிக்கின்றனர். இது ஜனநாயக விரோத மான செயல். எனவே அரச அதிகாரிகளும் நிர்வாக ஊழியர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தேர்தலில் எவரது அச்சுறுத்தலுக்கும் அடிபணியாது வாக்க ளிக்கவேண்டும் -என்றார். (ஐ)

# பேதம் இன்றி வாக்களியுங்கள்

## மனோ கணேசன் கோரிக்கை

ஹற்றன், செப்.16

மேல் மாகாணத்தில் வாழும் வடகிழக்கு வம்சாவளி தமிழ் மக்கள் ஜனநாயக மக்கள் முன்னணி தலைமையின் கீழ் அணி திரண்டு ஆதரவு வழங்குவது போல் வடக்கில் வாழும் மலையக வம்சாவளி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கீழ் அணி திரண்டு வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து ஆதரவளிக்க வேண்டும் என்று வடக்கில் வாழும் அனைத்து மலையக வம்சாவளி தமிழ் மக்களையும் தயவுடன் வேண்டுகின்றேன் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


வடக்கின் பிரதான மாவட்டங்களில் மலையக மக்கள் வாழ்கின்றனர். வடக்கில் வாழும் மலையக மக்கள் தமிழ்த் தேசிய இனத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். இந்த உள்வாங்கல் பரஸ்பர அங்கீகாரத்துடன் நடைபெற வேண்டும். கடந்த காலங்களில் நிலவிய கண்ணியமான சமூக நிலைமையை குழப்புவதற்கு சிலர் திட்டமிடுகின்றனர். இதை வடக்கில் வாழும் வம்சாவளி மக்கள் உணர வேண்டும்.

பேரினவாத தாக்குதல்களினால் தெற்கிலிருந்து துரத்தப்பட்ட மலையக தமிழ் வம்சாவளி மக்களுக்கு, வடக்கு தமிழ் மக்களும் அரசியல் தலைமையும் அடைக்கலம் வழங்கியுள்ளது. சிறுமுரண்பாடுகளை தள்ளி வைத்துவிட்டு வடமாகாண சபை தேர்தலில் அனைத்து தமிழர்களும் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் வாக்களிக்க வேண்டும்.

எனவே எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வடக்கு வாழ் மலையக வம்சாவளி வாக்காளர்கள் அனைவரும் அணிதிரண்டு வாக்களிக்க வேண்டும். (ஐ-5)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லை மாவட்டத்தின்
ஒரே ஒரு பெண் வேட்பாளர்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
போர் தந்த வலியால்
துவண்டு போயுள்ள
பெண்கள் வாழ்வு
மீண்டு எழ
உடன் உள்ள சகோதரி
வீட்டுச் சின்னத்தில் விருப்பு எண்
X 6

திருமதி மேரிகமலா குணசீலன்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)

X 6
உண்மையான நேர்மையான
மக்கள் சேவையாளனை
தெரிவு செய்து வெற்றிபெற
வையுங்கள்
இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள்
வடமராட்சி வர்த்தக சமூகம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எமது உயிரை உடைமைகளை உரிமைகளை
நாமே பாதுகாக்க...
X 4
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சமுதாய சீர்கேட்டை
கவனத்துக்கு கொண்டுவந்து
மீண்டும் சீரமைப்பதற்கு
மிகவும் காத்திரமான
பங்களிப்பை
வழங்குவேன்

X 7
தம்பி க.மு. தம்பிராசா
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றிட
ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வைக் கண்டிட
குமாரு சர்வானந்தன்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்)
X 11
பிரதேசசபை உறுப்பினர் மக்கள் தொண்டன்
குமாரு சர்வானந்தனை மாகாண சபைக்கு அனுப்பிவைப்போம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X

13
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்

பா.கஜதீபன் (ஆசிரியர்)
(யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)
X 17
இளையவர்களின்
தலைமைத்துவத்துக்காய்
இளைய தலைமுறையின் தெரிவு
யாழ் இந்துக் கல்லூரி
2001 உயர்தர
பழைய மாணவ நண்பர்கள்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
ஜனநாயக ஐக்கிய முன்னணி வேட்பாளர்
"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"
அருள்ஜெயந்திரன் (சண்ஜெ)

என்னை நீங்கள் அங்கீகரித்தால்
நான் கூறிய யாவும் உங்களுக்காக
சிரமப்பட்டு நிறைவேற்றுவேன்.
இல்லையேல் தட்டிக்கேட்கவும்
தண்டிக்கவும் உரிமையுண்டு.
X 2
உங்கள் தெரிவு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.
அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

## 1. கல்வி மேம்பாடு

யாழ்ப்பாணத்தின் முதுகெலும்பான கல்வி இன்று பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அச்சவால்களை வெற்றிகொண்டு குடாநாட்டுக் கல்வித்தரத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- கிராமப் பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கல்விக்குத் தடையாகவுள்ள வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்தல்
- உயர் கல்விக்குத் தேவையான இலத்திரனியல் சாதனங்களை வழங்குதல்.
- மாணவர்களின் பல்துறை ஆற்றல்களையும் மனவெழுச்சியினையும் ஊக்கப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- உயர்கல்விக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்தல்.

## 2. இளைஞர் அபிவிருத்தி


நவயுகத்திற்கும் தொழிலுலகிற்கும் ஏற்புடையதாக குடாநாட்டின் இளைஞர்கள் தம்மை இயைபாக்கிக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் இன்று மிகக் குறைவாகவே உள்ளன. அத்தகைய வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இளைஞர் திறன் விருத்திப் பட்டறைகளை கிராமங்கள் தோறும் நடாத்துதல்.
- உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளாத இளைஞர் களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குதல்.
- தகவல் தொடர்பாடல், ஆங்கிலம் போன்ற திறன்சார் கல்வியினை தரமாகவும் பரவலாகவும் கிடைக்கச் செய்தல்.
- சர்வதேசத் தரத்திலான இளைஞர் திறன் விருத்தி மையமொன்றை குடாநாட்டில் நிறுவுதல்.



# அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)



1

## 3. வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல்

குடாநாட்டில் பல இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களை எதிர்நோக்கியுள்ளார்கள். அவர்களுக்குப் பொருத்தமான தொழில்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு சுபீட்சமான வாழ்விற்கு வழியமைக்கப்படும். இவ்வேலைவாய்ப்புக்கள் பாரபட்சமின்றியும், பணங்கொடுத்து வேலைவாங்கும் கலாசாரத்திற்கு மாற்றாகவும், எவ்வித எதிர்பார்ப்புக்கள் இன்றியும், இதுவரை என்னால் வழங்கப்பட்டதைப் போலவே தொடர்ந்தும் வழங்கப்படும்.

- மாகாண சபையிலுள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக நியமனங்களை வழங்கல்.
- மத்திய அரசின் கீழான திணைக்களங்கள் நிறுவனங்களின் வெற்றிடங்களில் எமது இளைஞர்களை நியமிக்க முயற்சித்தல்.
- தனியார்துறை வெற்றிடங்களில் எமது இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க தொடர்பாளராய்ச் செயற்படுதல்.

**எங்களின் நேர்மை**
**உங்களின் நம்பிக்கை**

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

## 4. விவசாய வேளாண்மை விருத்தி

விவசாயத் துறையில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் நாம். இன்று இத்துறையில் நலிவடைந்துள்ளோம். மீண்டும் விவசாய வேளாண்மைத் துறைகளை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- விவசாய, வேளாண்துறை முயற்சியாளர்களுக்கு இலகு கடன்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பொருத்தமான மானிய, நிவாரண உதவிகள் விரைவாகக் கிடைக்க உதவுதல்.
- சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதோடு இலகுவாக்குதல்.
- சந்தைகளில் செயற்கையாக ஏற்படுகின்ற விலைத் தளம்பல்களில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளுக்கு எக்காலத்திலும் முக்கியத்துவத்தினை வழங்க முயற்சித்தல்.
- காப்புறுதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- இடைநிறுத்தப்பட்டுள்ள விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தினை மீளப் பெற்றுக் கொடுத்தல்.

## 5. சிறுவர் விருத்தி

எமது பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினரான சிறுவர்களைப் பாதுகாப்பதோடு அவர்களை ஆற்றலுள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு வருகின்றது.

- சிறுவர் விருத்தியில் அதீத அக்கறையுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.
- கிராமந்தோறும் சிறுவர் பூங்காக்களை நிறுவுதல்.
- துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதோடு துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சட்டங்களை வலுவாக்க நடவடிக்கை எடுத்தல்.
- சிறுவர் கண்காட்சி மையங்களை நிறுவுதல்




## 6. புனர்வாழ்வளித்தல்

- தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்விற்கு உதவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- அரச, தனியார் துறைகளில் பொருத்தமான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருதல்.
- சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கான கடன் மற்றும் ஆதார உதவிகளை ஏற்பாடு செய்தல்.
- தேவைக்கு ஏற்ற தொழிற் பயிற்சி, ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- வாழ்வதற்கான நம்பிக்கையை உருவாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

## 7. ஏனையவை

- குடாநாட்டிலுள்ள தொழிற்சாலைகளைப் புனரமைத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளை விருத்தி செய்தலும் சுய தொழில்களை ஊக்குவித்தலும்.
- கிராமம் தோறும் சந்தைகளைச் சீரமைத்தல், சனசமூக வளர்ச்சியில் பங்கெடுத்தல்.
- ஓய்வூதியர்களுக்கான பொழுதுபோக்கு மையங்களை அமைத்தல்.
- கிராமிய வைத்தியசாலைகளைத் தரமுயர்த்தல், வீதிகளைப் புனரமைத்தல்.
- எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதுமான நிரந்தரத் தீர்வொன்றிற்கு ஆதரவு அளித்தலும் அதனை விரைவுபடுத்த முயற்சித்தலும் இலங்கையின் பிறமாகாணங்களைப் போன்றும் அதற்கு மேலாகவும் விரைவான அபிவிருத்தியை வடக்கில் ஏற்படுத்தி எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு உழைப்பதே எனது நோக்கு.

**எங்களின் நேர்மை**
**உங்களின் நம்பிக்கை**

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியை நண்பனாக மாற்றி அபிவிருத்தியை ஏற்படுத்துவோம்

## ஆளும் தரப்பு வேட்பாளர் தவநாதனுக்கு திடீர் 'ஞானம்'



கிளிநொச்சி, செப்.16

அமெரிக்காவின் அணு குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஜப்பான், அமெரிக்காவுக்கு எதிராகப் போர் தொடுக்கவில்லை.

அந்த அழிவையும் சகித்துக் கொண்டு அமெரிக்காவுடன் இணங்கிப் போனதால்தான் இன்று இந்தளவுக்கு வளர்ந்துள்ளது. இந்த அணுகுமுறையையே நாமும் கைக் கொள்கிறோம். எதிரியையும் நண்பனாக்கிக் கொண்டு அபிவிருத்தியை காண முயற்சிப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் ஆளும் தரப்பில் கிளிநொச்சியில் போட்டியிடும் வை.தவநாதன். கிளிநொச்சி முழங்காவில் இரணை மாதா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபையை ஏற்றுக் கொள்வதன் ஊடாக அரசியல் உரிமைப் பிரச்சினையும் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் தீர்த்து அரசியல் தீர்வை எட்ட முடியும்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இருந்த பழங்குடியின மக்களும் மற்றும் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற எல்லைப் புறங்களில் வாழ்ந்த மக்களும் எதிரியை இராஜதந்திர ரீதியில் புத்திகூர்மையுடன் எதிர்கொள்ளாமல் முரட்டுத்தனமாக எதிர்கொண்டனர். இதனால் இவர்கள் பலவீனப்பட்டு உலகோடு ஒத்துப் போகாமல் அளவில் சிறிதாக மாறி அடையாளமே இல்லாமற் போயினர்.

ஆனால் ஜப்பான் தனது எதிரியையே சிநேகிதனாகப் பாவித்து வெற்றி கண்டுள்ளது. இதுவே எமது தந்திரம். இலங்கை அரசுடன் இணங்கியிருந்து அபிவிருத்தியை முன்னெடுப்போம் - என்றார். (ஐ-18)





ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி உட்பட அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (ஐ-21)





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரின் அனுமதியுடன்தான் தமிழர்கள் உரிமையைப் பெறலாம்

## இப்படிக் கூறுகிறார் இடதுசாரியான அமைச்சர் வாசுதேவவே



யாழ்ப்பாணம், செப்.16

தமிழ் மக்களின் உரிமைதான் சிங்கள மக்களின் சுதந்திரம். சிங்கள மக்களின் அனுமதியுடன்தான் தமிழ் மக்கள் தங்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இடதுசாரி அமைச்சரான வாசுதேவ நாணயக்கார யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித் தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பத்திரிகை யாளர் சந்திப்பில் தெரிவித்த விடயங்களை இங்குள்ள ஊடகங்கள் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளன. "சிங்கள மக்களுடன் இணைந்துதான் தமிழ் மக்கள் தங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். சிங்கள மக்களின் அனுமதியுடன் தான் தமிழ் மக்கள் தங்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ் மக்களின் உரிமைதான் சிங்கள மக்களின் சுதந்திரம்" என்றார்.

இங்கு உரையாற்றிய மற்றொரு இடதுசாரி அமைச்சரான திஸ்ஸவிதாரண; "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தெற்கு மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேசத்தையும் இழுத்து முரண்பாட்டு அரசியலை உருவாக்க முற்படுகின்றனர்.

யாழ்ப்பாண மக்களிடம் நான் ஒரேயொரு கேள்வியை கேட்க விரும்புகின்றேன். மீண்டும் போர் தொடங்க உங்களுக்கு விருப்பமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிழையான அணுகுமுறை தென்பகுதியில் எதிர்வினையை ஏற்படுத்தியுள்ளது.-என்றார். (ஐ-5)

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16/09/2013

# தென்னிலங்கையர் கூறுவதுபோன்று நாம் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர்

## அதிகாரத்தை கையிலெடுக்க வீட்டுக்கு வாக்களிப்போம் என்கிறார் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், செப்.16

இராணுவத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டு குழந்தைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தை கிடைத்தால் ஒரு லட்சம் ரூபாவை ஊக்குவிப்புநிதியாகக்கொடுத்து அவர்களை மேலும் உற்சாகப்படுத்துகின்றது அரசு. ஆனால் வடக்கில் பல ஆயிரம் குழந்தைகள் தாய், தந்தை இருவரையும் இழந்து அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஏதாவது ஒரு நலத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி உள்ளதா? என்று கேள்வி எழுப்புகிறார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.



கடந்த வெள்ளிக்கிழமை சங்கானையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில்உரையாற்றும்போதுஅவர் மேலும் தெரிவித்த தாவது:-

அரசின் கைக்கூலிகள் இன்று காசுக்காக நம் இனத்தை விற்றுச் சீவியம் நடத்துகின்றனர்.

வடக்கின் வசந்தம் என்றும் அபிவிருத்தி அபிவிருத்தி என்றும்கூச்சல்போடுகின்றனர். நாம் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர். நாட்டைப் பிரித்துக் கேட்பவர்களும் அல்லர்.

கடந்த 60 வருடங்களாக எமதுதமிழ்மக்களுக்காகஎந்த அபிவிருத்தியும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக அவர்களிடம் இருப்பதையும் அரசு பறித்தெடுக்கவே முயற்சிக்கின்றது.

இன்று யாழ். மாவட்டத்தில் 50 ஆயிரம் இளம் சகோதரிகள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரம் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். நமது சொந்தக் காணிகள் 6,500 ஏக்கரை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. காணி சொந்தக்காரர்கள் நடுவீதியில் விடப்பட்டுள்ளனர். பல ஆயிரம் பேர் அங்கங்களை இழந்து துன்பப்படுகின்றனர்.

தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. பல ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர். பெருமளவிலான தமிழ் இளைஞர், யுவதிகள் எந்த விதமான விசாரணை களும் இன்றி சிறைக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படிப் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்காக அல்லது அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஏதாவது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருந்தால் நாம் இந்த அரசைப் பாராட்டுவோம். இவர்கள் சிறிதளவாவது நம்மைப் பற்றிக்கவலைப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் வசதிக்காகவும் அவர்களின் போக்குவரத்து தேவைகளுக்காகவும் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்ளவும் எமது பாரம்பரிய சொத்துக்களை தென்பகுதிக்கு கடத்திச் செல்லவும் வசதியாகவே வீதி அபிவிருத்தி செய்யப்படுகிறது.

ஓர் இறைமை உள்ள அரசுக்கு தனது நாட்டின் பிரஜைகள் அனைவரையும் சமமாகப் பரிபாலனம் செய்ய வேண்டிய கடப்பாடு உண்டு. ஆனால் இங்கு நாம் தமிழர்கள் என்பதால் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஒதுக்கப்படுகின்றோம்.

நாம் இவர்களிடம் பிச்சை கேட்கவில்லை. எமது அடிப்படை உரிமைகளைத்தான் கேட்கின்றோம். இன்று அதிகாரங்கள் அடிவருடிகளின் கைகளில் இருக்கின்றன. அவை தமிழர்களின் கைகளுக்கு மாற வேண்டும். இதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் நாம் திறமையான வெற்றியை அடைந்தால் இந்தியா, அமெரிக்கா உட்படப் பல நாடுகளினதும் புலம்பெயர்ந்து வாழும் பத்து லட்சத்துக்கும் அதிகமான நம் உறவுகளின் உதவியுடன் வடமாகாணத்தைக் கட்டி எழுப்ப முடியும்- என்றார். (ஐ-2)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வலுச் சேர்க்கும் வகையில் களமிறங்கியுள்ள அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு தமிழரசுக் கட்சிக் கிளை முக்கியஸ்தர்கள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் செல்லையா இராசையா தலைமையில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடிய வேளையில்.... (ஒ-30)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் எம்.கே.சிவாஜிலிங்கம் அவரது ஆதரவாளர்களு டன் நெடுந்தீவில் தேர்தல் பரப்புரைப் பணிகளை மேற் கொண்டிருந்தார். (ஐ-5)

# கொலை, கொள்ளைக்காரரை மாகாண சபைக்கு அனுப்பாதீர்

## அமைச்சர் ரெஜினோல்ட் குரே



யாழ்ப்பாணம், செப்.16

கொலைகாரர்கள்- கொள்ளைக் காரர்களை மாகாண சபைக்கு அனுப்பினால்அபிவிருத்திவேலை களை அவர்களால் செய்ய முடியாது எனத் தெரிவித்தார் அமைச்சர் ரெஜினோல்ட் குரே.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் துரையப்பா விளை யாட்டரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு தமிழில் உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த போரில் பிரபாகரனோ அல்லது மஹிந் தவோ வெற்றிபெறவில்லை. வடக்கோ தெற்கோ வெற்றி பெறவில்லை. மாறாக போரின் உயிரிழப்புக்கள் முன் அனை வரும்தோல்வியடைந்துவிட்டோம். இங்கு போர் நடந்துகொண்டி ருந்தபோது இந்தப் பகுதி மக்க ளின் மனதிலிருந்தது சமா தானமே. இப்போது மக்கள் மனதில் இருப்பது அபிவிருத் தியே.

இங்கு சண்டை நடந்து கொண்டி ருந்தபோது விக்னேஸ்வரன் ஐயா எங்கேயிருந்தார். கொழும் பில் இருந்தார். அவரது மகன் திருமணம் செய்திருப்பது எனது நண்பர் அமைச்சர் வாசு தேவ வின் மகளையே.

எங்களது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரி நிரு பமா ராஜபக்ஷ திருமணம் செய் திருப்பது தமிழரான நடேசனை. இவர்களால் செய்ய முடியும் என்றால் எங்களால் ஏன் கலப் புத் திருமணம் செய்ய முடியாது.


"மண்ணுக்கு மரம் பாரமா? மரத்துக்கு இலை பாரமா? கொடிக்கு காய் பாரமா. பெற் றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா? அதேபோன்று ஜனா திபதி மஹிந்தவுக்கு தமிழ் மக்கள் பாரமா? இல்லவே இல்லை- என்றார். (ஐ-5)







ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் கலந்துகொண்டனர். (ஐ-21)

உங்களின் வெற்றி
எங்களின் வெற்றி



C.V.K
சீ.வீ.கே. சிவஞானம்
தமிழரசுக் கட்சி துணைப் பொதுச்செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
வாக்களிப்போம்
அமோக வெற்றி
அடையச் செய்வோம்



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

[illegible], நல்லூர், வலிகாமம், தீவகம்
வடமராட்சி, தென்மராட்சி, அனைத்து மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறைகள் 427

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் 427 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் சட்டவரையறைகளை மீறியமை தொடர்பில் 378 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 49 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவாக 114 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அரச அதிகாரிகள் அரசியல் நடவடிக்கைகளில் தொடர்புபட்டமை குறித்து 87 முறைப்பாடுகளும், அரச வாகனங்கள் அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் 58 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல்கள் தொடர்பில் தம்மிடம் 142 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரை தேர்தல் சட்ட வரையறைகளை மீறியமை தொடர்பில் 125 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

# முல்லைத்தீவில் அமைச்சர் கஜதீர

முல்லைத்தீவு, செப்.16

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர ஈடுபட்டு வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு குமுழமுனை பொது நோக்கு மண்டபத்தில் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இதில் முல்லைத்தீவில் போட்டியிடும் சதீஸ்குமார் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் கலந்து கொண்டு தமது பரப்புரைக் கருத்துக்களை முன்வைத்தனர்.

(ஜ-435)

## யார் இவர்?

1) நிர்வாகத் திறமை மிக்கவர்
2) மும்மொழிகளிலும் ஆற்றல் மிக்கவர்
3) போர் அழிவுகளுக்கு மத்தியிலும் மக்களுக்கு அரும் பணியாற்றியவர்
4) எரிக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தை புனரமைப்புச் செய்ய உழைத்தவர்
5) 1987 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைக்கு தலைமை அதிகாரியாக நியமிக்கப் பட்டவர்

நாளைய உதயனைப் பாருங்கள்


வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
அன்பு நெஞ்சங்களே....!
வாழ்ந்தாலும் உங்களோடு விழ்ந்தாலும் உங்களோடு
வளர்ந்தாலும் உங்களோடு தான் எந்தமிழ் மனம் மாறாது
நின் தமிழோசை பரவும் அதற்கு எந்தனுக்கு
உங்கள் வாக்கினை அள்ளி வழங்கி உதவுவீர்களாக !
வீ. கனகசுந்தரசுவாமி
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
X 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தேசியம் - சுயநிர்ணயம் - தன்னாட்சி
வடக்கு மாகாண
உட்கட்டுமான அபிவிருத்திக்கு
நம்பிக்கைக்குரிய தெரிவு
வே.சிவயோகன்
அனுபவம் மிகுந்த பொறியியலாளர்
X 18
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(31178)(10,6,3)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013
TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்
இடம் : சாவகச்சேரி பஸ் நிலையம்
காலம் : இன்று (16.09.2013) திங்கட்கிழமை மாலை 4.30 மணி
தலைவர்:
இ. தேவசகாயம்பிள்ளை (தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி)
சிறப்புரைகள் :
சட்டத்தரணி கேசவன் சஜந்தன் (வேட்பாளர்)
திரு.நடராசா காண்டீபன் (சட்டத்தரணி)
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ சி.சிறீதரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.ஏ. சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
முன்னாள் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் (முதன்மை வேட்பாளர்)
கௌரவ மாவை. சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
அருணா இசைக்குழுவினரின் எழுச்சிப்பாடல்களுடன்
இசை நிகழ்ச்சியை கேட்டுக்களிக்கவும் அலை அலையாக திரண்டு
வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
-ஏற்பாட்டுக்குழுவினர்-
இலங்கைத் தமிழரசுக் கட்சி X
TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய விவகாரத்தில் ஒப்பந்தம்

## கைச்சாத்திட்டனர் அமெ.-ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்கள்

மொஸ்கோ, செப்.16
ரஷ்யா – அமெரிக்கா இடையே நடைபெற்ற மூன்றுநாள் பேச்சுக்களின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே சிரிய விவகாரம் தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

### ஒப்பந்தம்

இருநாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் சிரிய இரசாயன ஆயுதங்களை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான கால அட்டவணை, சிரியா எவ்வாறு இந்த விடயத்தில் செயற்பட வேண்டும் என்பது குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி கூறும்போது, 'சிரியாவிடம் உள்ள அனைத்து இரசாயன ஆயுதங்களுக்கும் அழிக்கப்படவேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளோம். எனினும் சிரியா உறுதியளித்தவாறு செயற்படுகின்றதா என்பது குறித்து உன்னிப்பான கண்காணிப்பு வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது அமெரிக்கா" என்று தெரிவித்துள்ளார்.

### ஆயுதங்கள்

சிரியாவிடம் ஆயிரம் மெட்ரிக் தொன் அளவுக்கு மெஸ்டேர்ட் மற்றும் சரின் வாயு, சல்பர் மற்றும் வி.எகபுஸ் ஆகிய இரசாயன ஆயுதங்கள் இருக்கும் என்று அமெரிக்கா கூறுகின்றது. எனினும் அதை விடக் குறைவான தொகை ஆயுதங்களே சிரியாவிடம் இருக்கக் கூடும் என்பதில் ஆரம்பம் முதல் உறுதியாகக் கூறிவருகின்றது ரஷ்யா.

### எச்சரிக்கை

அதேவேளை, சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத் இரசாயன ஆயுதங்களைக் கைவிடுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறினால், சிரியா மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவாக அமெரிக்கப் படைகளின் தயார் நிலை தொடரும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் . அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

"இராணுவத் தாக்குதலை தாமதப்படுத்தும் ஒரு தந்திரமாக ரஷ்யாவின் சமரசத் திட்டத்தை சிரியா பயன்படுத்தி விடக் கூடாது என்பதில் அமெரிக்கா கவனமாக இருக்கின்றது. சிரியாவுக்கு நெருக்கடி கொடுக்க அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல் தயார் நிலை தொடரும்" என்று மேலும் தெரிவித்துள்ளார் ஒபாமா. (ற)


மூன்று நாள்கள் இடம்பெற்ற பேச்சுக்களின் முடிவில் இணக்கம் காணப்பட்ட முடிவுகளை அறிவித்த அமெரிக்க, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்கள்

### ஈராக் குண்டு வெடிப்பு: 20 பேர் சாவு

பாக்தாக், செப்.16
ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
ஈராக்கின் மோசுல் நகரில் இடம்பெற்ற மரண சடங்கு ஒன்றை இலக்கு வைத்து இந்த குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.
ஈராக்கில் தொடர்ந்து இடம்பெறும் குண்டுத்தாக்குதல்களால் நாள்தோறும் சராசரியாக 50க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

### மதிய உணவு உட்கொண்ட 180 குழந்தைகள் பாதிப்பு

*சீனாவில் பரபரப்பு*

பீஜிங், செப்.16
சீனாவில் ஆரம்பப் பள்ளியில் வழங்கப்பட்ட சிற்றுண்டியை உட்கொண்ட 180 குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 12 குழந்தைகளின் உடல்நிலை ஆபத்தாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன.
மத்திய சீனாவின் ஷின் ஹூயா பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆரம்பப் பாடசாலையில் வழங்கப்பட்ட சிற்றுண்டியை உட்கொண்ட குழந்தைகள் வயிற்றுவலி, தலைவலி, வாந்தி போன்றவற்றால் பாதிக்கப்பட்டனர். அதையடுத்து அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் ஷின்ஹூயா பகுதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட உணவின் மாதிரிகள் தற்போது சோதனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (ற)

### அதிக வயதான அமெரிக்கர் உயிரிழந்தார்

நியூயோர்க், செப்.16
உலகிலேயே அதிக வயதான அமெரிக்கர் என்ற சாதனையை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்ய அமெரிக்காவைச் சேர்ந்த சாலுஸ்டியானோ சான்செஸ் பிளாஷ்க்யிஸ் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.
112 வயதான பிளாஷ்க்யிஸ் கடந்த சில நாள்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு நியூயோர்க்கில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். (ற)


அமெரிக்காவின் கொலராடோ நகரில் கடந்த பத்தாண்டுகளில் இல்லாதவாறு தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 172 பேர் காணாமற்போயுள்ளனர். தற்போது மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றபோதும் தொடரும் சீரற்ற காலநிலையால் மீட்புப் பணிகள் தாமதமடைந்து வருகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. மீட்புப் பணிகள் தொடர்வதால் இழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.(ற)

### 'பியர்' திருவிழா: படையெடுக்கும் ஜேர்மனியர்கள்



பெர்லின், செப்.16
அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'பியர்' திருவிழாவுக்காக இப்போதே முனிச்நகரை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கி விட்டார்கள் ஜேர்மன் 'குடி' மக்கள்.
ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் ஜேர்மனியின் முனிச் நகரில் 'பியர் திருவிழா' கொண்டாடப்படுவது வழக்கம். இந்தத் திருவிழா அந்த நகரத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களில் ஒன்று.
பியர் திருவிழா என்றால் வேறொன்றுமில்லை, எல்லோரும் கூடி 'குடித்து' கும்மாளமிடுவது தான்.
அதற்காக இப்போதே முனிச் நகரை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கி விட்டனர் ஜேர்மன் மக்கள். அதனால் அங்குள்ள விடுதி உரிமையாளர்கள் எல்லாம் கடும் மகிழ்ச்சியில் இருக்கின்றார்களாம். விடுதிகள் எல்லாம் நிரம்பி வழிகின்றன. அதுவும் விடுதி வாடகைகள் எல்லாம் மும்மடங்கு அதிகரிக்கப்பட்டும் நிரம்பி விட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் 'பியர் திருவிழா'வின் மகிமையை.(ற)

## அதிநவீன ரொக்கெட்டை செலுத்தியது 'ஜாக்ஸா'

டோக்கியோ, செப்.16
ஜப்பான் விண்வெளி நிறுவனம் 'ஜாக்ஸா' மிகவும் அனுகூலமான புதிய தலைமுறை விண்வெளி ரொக்கெட்டை விண்ணுக்குச் செலுத்தியுள்ளது.
'எப்சிலான்' என்ற செயற்கை நுண்ணறிவு கருவிகளை உள்ளடக்கிய தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த அதி நவீன ரொக்கெட்டின் எடையானது முன்பு அனுப்பப்பட்ட ரொக்கெட்டுகளின் எடையின் பாதியளவே உள்ளது.
37 மில்லியன் டொலர் மதிப்பிலான இந்த அதி நவீன ரொக்கெட் ஜப்பான் விண்வெளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உலகின் முதலாவது தொலைநோக்கியை எடுத்துச்சென்றது. பூமியிலிருந்து சுமார் 1000 கிலோமீற்றர் தூரத்தில் அந்த டெலஸ்கோப்பை விட்டு ரொக்கெட் பிரிந்தது.
பூமியின் சுற்றுவட்டப்பாதையில் விடப்பட்டுள்ள இந்த 'ஸ்பிரிண்ட்-ஏ' தொலைநோக்கியானது கோள்கள் பற்றி ஆராய்ந்து படம் பிடித்து அனுப்பும். இது ஆராய்ச்சியாளர்களுக்கு நிறைய தகவல்களைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் விண்வெளி பற்றிய அரிய தகவல்களை தரும் என்று நம்பப்படுகிறது.



முன்பு அனுப்பப்பட்ட ரொக்கெட்டுகளை விடவும் பாதியளவு எடையுள்ள செயற்கை நுண்ணறிவு கருவிகளை கொண்டு கட்டப்பட்ட இந்த எப்சிலான் ரொக்கெட்டை அனுப்ப 8 விஞ்ஞானிகள் மட்டுமே தேவைப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த வெற்றியை அடுத்து மேலும் தொலைநோக்கிகளை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சிகளைத் தொடங்கியுள்ளது 'ஜாக்ஸா'. (ற)

## இந்திய எழுத்தாளர் சுட்டுக் கொலை; உரிமை கோரியது தலிபான் அமைப்பு

காபூல், செப்.16
ஆப்கனில் வசித்த இந்திய எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு உரிமை கோரியுள்ளது தலிபான் அமைப்பு.
இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள தலிபான் அமைப்பின் காரி ஹம்ஜா தாம் சுஷ்மிதாவை கொன்றதை ஒப்புக் கொண்டுள்ளார்.
"சுஷ்மிதா பானர்ஜியை இந்தியாவின் உளவாளி என்று கருதினோம். அவரை வீட்டில் இருந்து கடத்திச் சென்று அவரிடம் 3 மணி நேரம் கடுமையான முறையில் விசாரணை நடத்தப்பட்டது.
அப்போது அவர் ஆப்கனில் உள்ள சிலரின் பெயர்களைக் கூறினார். அதன் பிறகே அவரைச் சுட்டுக் கொன்றோம்" என்று கூறியுள்ளார் அவர்.(ற)


ரஷ்யாவின் வெலிகை நவ் கரட் நகரத்தில் உள்ள மனநல காப்பகம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மருத்துவமனைக் கட்டடம் பாதுகாப்பற்றது. மருத்துவமனையை உடனடியாக மாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் மருத்துவமனை நிர்வாகம் அடுத்த ஆண்டு வரை செயற்படும் வகையில் அனுமதி பெற்றிருந்தது. தீ வேகமாகப் பரவியமைக்கு பழைமையான மரத்தாலான கட்டடமே காரணம் என்று கூறப்படுகின்றது.

### முன்னேற்றம் அடைகின்றது எதியோப்பியா

லண்டன், செப்.16
எதியோப்பியாவில் சிறுவர்களின் இறப்பு வீதம் கடந்த இரண்டு தசாப்தங்களில் குறைவடைந்துள்ளது என்று ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.
ஆபிரிக்க கண்டத்தின் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள எதியோப்பியா கடந்த வருடங்களிலேயே பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிறக்கின்ற ஆயிரம் குழந்தைகளில் 200 குழந்தைகள் இறக்கின்ற நிலைமை காணப்பட்டது. தற்போது அந்த நிலை மாறியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வஞ்சகர் வலையில் விழுந்து வாக்குகளை வீணாக்காதீர்...!

வடக்கு மாகாண சபைக்கான கன்னித் தேர்தல், இன்றுடன் சேர்த்து இன்னும் ஆறு நாள்களில் நடைபெற உள்ளது. அதனையொட்டிய பிரசாரத்தை இன்னும் நான்கு நாள்களுக்கு மட்டுமே நடத்துவதற்கு தேர்தல் விதிகள் வகை செய்கின்றன. அனுமதிக்கின்றன. அதனால் இந்த நாள்களில் வடக்கு மாகாணம் களை கட்டப்போகின்றது.

வாக்காளர்களை தம்வசம் திருப்புவதற்கான எத்தனை எடுகோள்கள், என்னென்ன உத்திகள் உள்ளனவோ, அவை அனைத்தையும் அவிழ்த்துவிட அரசியல் கட்சிகள் திட்டமிட்ட முறையில், தமது பிரசார இயந்திரத்தை வெகு வேகத்துக்கு முடுக்கிவிடும் என எதிர்பார்க்கலாம். சுயேச்சைக் குழுக்களும் தமது பங்குக்கு ஆலாய்ப் பறக்க முற்படும்.

ஆனால், வடக்கு வாக்காளர்களை ஏய்க்காட்டி தமது வாக்கு வங்கிகளை நிரப்பலாம் என்று கட்சிகளோ, வேட்பாளர்களோ நினைத்தால் அது ஏமாற்றத்திலேயே முடியும்.

வடக்கில் நடைபெற்ற நாடாளுமன்றத்துக்கான தேர்தல்களை விடவும், மாகாண சபைத் தேர்தல் முக்கியமான, பிரதானமான ஒன்றாக உருப்பெற்றுள்ளது; கனதியான வடிவம் எடுத்துள்ளது.

வடக்கு வாழ் மக்கள், தங்கள் பிரதேசத்தை தாமே அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு இந்தத் தேர்தல் மூலம் முதல் தடவையாக கைக்கு வரப்போகிறது என்பது ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடக்கு மாகாண சபை என்ற கட்டமைப்பு, இப்போது கொழும்பு அரசினதும் அதன் அதிகாரிகளினதும் கைகளிலேயே, முழுக்க முழுக்க முடங்கிக் கிடக்கிறது. மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் மாகாணத்தின் அபிவிருத்திக்கும் அதிகாரிகளே தனித்துத் திட்டமிடுகிறார்கள், செயற்படுத்துகிறார்கள். மக்கள் பங்களிப்போ அவர்கள் பிரதிநிதிகளின் பங்களிப்போ வழிகாட்டுதல்களோ இன்றி வெறும் பொம்மை விளையாட்டாக முடிகிறது. மக்கள் ஆட்சி வடக்கில் நடைபெறுகிறது என்று தவறியும் உச்சரிக்க முடியாத நிலையே தேறியுள்ளது.

அந்த நிலையைப் போக்குவதற்கு, ஏனைய மாகாணங்களைப் போன்ற சமாந்தர நிலையைத் தோற்றுவிக்க வடக்கு மக்களுக்கு கிடைத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அதன் அர்த்தம் உணர்ந்து பயன்படுத்துவது, எமது மக்களின் தவிர்க்க முடியாத பொறுப்பும் கடமையும் ஆகும்.

தேர்தலில் வெற்றி பெற்று, அதிகாரத்தை- வடக்கு மாகாண சபை ஆட்சியை- பொறுப்பேற்பவர்களின் நோக்குகளையும் போக்குகளையும் பகுத்துணர்ந்து, மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டிய புறமொதுக்க முடியாத தேர்தல் இது.

ஆள் பாதி, ஆடை பாதி என்ற வழமையான போக்கைக் களைந்து, எமது மாகாணத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அடித்தளம் இடவல்ல கொள்கைகளை மனதில் ஏற்றிச் செயற்படும் தரப்புக்கே வாக்குகளை வழங்குவதற்கு மக்கள் மனம் கொள்ளவேண்டும்.

எங்கள் மாகாணத்தை நாமே- எம்மவர்களே- ஆளும் உரிமை எமக்கு இப்போதே கிடைக்கிறது. இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை, அரசியல் வஞ்சத்துடன் பிரிக்கப்பட்ட பின்னர் வடக்குக்கு ஜனநாயக ரீதியான தேர்தல் எட்டாக் கனியாக மாற்றப்பட்டது.

இறுதிப் போரில் மிகப் பெரியளவில் வன்னி மாவட்டம் பாதிக்கப்பட்டதால், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு எனக் கூறி "லேபல்" ஒட்டப்பட்டு மாகாண சபை உருவாக்கம் உள்ளறுக்கப்பட்டது.

பல காரணங்களை முன்வைத்து, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கட்டமைப்பு கானல் நீராகத் தொடர்ந்தது. அதற்கான உள்ளூர்ந்த உறுத்தல் காரணங்கள் பல வெளிப்படுத்தப்பட்டன.

அந்நிலை மாற்றப்பட்டு, இவ்வாரத்தில் நடைபெற உள்ள மாகாண சபைத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் புனுகு பூசிக் கொண்டு,பலப்பல வேடம் தரித்த தரப்புகள் வடக்கில் களத்தில் உலா வருகின்றன.

தமக்குச் சேர வேண்டிய பிரதான உரிமைகள் மழுங்கடிக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் தவித்து நிற்கும் தமிழ் மக்கள், ஓர் அடி தானும் முன்னே வைக்க வகை செய்ய வல்ல, மாகாண சபைத் தேர்தலைத் தக்க வகையில் பயனுள்ளதாக்க முன்வர வேண்டும்.

அற்ப சொற்ப சலுகைகள் மற்றும் வாய்ப்புக்களுக்காக உங்கள் பொன்னான வாக்குகளைப் பொசுங்கிடச் செய்யாதீர்கள், இடமளியாதீர்கள். நயவஞ்ச நோக்கத்துடன் உங்களை நாடி வருபவர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து தூர விலகிக் கொள்ளுங்கள்.

உங்களுக்கும், உங்களது மாகாணத்தின் மக்களுக்கும் பேருதவி புரிந்த நற்பலன் கிடைக்கும். தங்கத்தின் எடையுள்ள உங்கள் பெரும் பெறுமதியுள்ள வாக்குகளை தரங் கண்டு பயன்படுத்துங்கள்.

# மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கூட்டமைப்புக்கு கிடைக்குமா?

## அதை இல்லாமல் செய்வதற்கே அரசு தரப்பினர் பகீரத முயற்சி

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டத்துக்குப் பெருந்திரள் மக்கள் வந்திருந்தார்கள். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ரயில் நிலையத்தை அவர் திறந்து வைத்த போதும் அதே நிலைமைதான். இவைகளைப் பார்த்தவர்கள் அரசு பக்கம் நல்ல வாய்ப்பு சாய்கிறது என்று கூறக்கூடும்.

யாழ்ப்பாண குடாநாடு மற்றும் அதன் சுற்று வட்டத்திலுள்ள மாவட்டங்களுக்கு பயணம் செய்துவிட்டு அதேநாளில் வடமேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல் களங்களுக்குச் செல்லும் எவரும் வடமாகாணத்திலுள்ள நிலைமை ஏனையவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டு காண்பதை உணர்வார்கள். வீதி மதில்களிலும், விளக்குத் தூண்களிலும் காணப்படும் ஒருசில சுவரொட்டிகளைத் தவிர பதாகைகள் மற்றும் வீதிகளில் வேட்பாளர்களின் இலக்கங்கள் எழுதப்பட்டிருப்பது மிகக் குறைவு. அங்கு தேர்தல் காய்ச்சலுடனான செயற்பாடுகளைக் காணோம். மோதல்கள் என்று சொல்வதானால் உட்கட்சி மோதல்களைத்தான் கூற வேண்டும். அதுவும் ஆளும் கட்சிக்குள்ளேயே அதிகம். சில கட்சி அலுவலகங்கள் சோடிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளில் ஓரிருவர் காணப்படுகிறார்கள். நெடுந்தீவில் குறிப்பாகச் சொல்வதானால் ஒரு சில சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அதுவும் அதிகம் பிரபல்யமில்லாத ஒரு வேட்பாளருடையவை. நெடுந்தீவு மருத்துவமனைக்கு முன்னால் அந்தச் சுவரொட்டிகள் சிலவற்றைக் கன்றுக்குட்டியொன்று தின்றுகொண்டிருப்பதைக் காண முடிந்தது. இவைகளைத் தவிர அந்தத் தீவில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.) தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் சிரிப்பு உதிர்க்கும் படத்துடனான சுவரொட்டிகள் தான் எங்கும் காணக் கிடைத்தன.

மீன்பிடிக்கும் பவளப் பாறைகளுக்கும் முக்கியமான சுமார் 1,500 குடும்பங்களைக் கொண்ட இந்தப் பகுதி அவருடைய பலமிக்க ஆதரவுக் களம் ஆகும்.

வடக்கில் அரசியல் செயற்பாடுகள் தீவிரமாகக் காணப்படாவிட்டாலும் அங்கு முற்றுமாக எல்லாம் அமைதியாகி விட்டது என்று எண்ணி விடலாகாது. இதற்குக் காரணம் பயம் அல்லது தடைகளாக இருக்கலாம் அல்லது இரண்டும் காரணமாகலாம். ஆனால் வெளியில் தெரியாத வகையில் பலமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தேர்தல் செயற்பாடுகளில் அதிகரித்த கரிசனை காணப்படாவிட்டாலும் கூட்டங்களுக்கு மக்கள் திரள்வது குறைந்து விடவில்லை. கடந்த புதனன்று மன்னாரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டத்துக்குப் பெருந்திரள் மக்கள் வந்திருந்தார்கள். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ரயில்வே நிலையத்தை அவர் திறந்து வைத்த போதும் அதே நிலைமைதான். இவைகளைப் பார்த்தவர்கள் அரசு பக்கம் நல்ல வாய்ப்பு சாய்கிறது என்று கூறக் கூடும். ஆனால் அரசு சார்ந்த கூட்டங்களுக்கு மட்டுமல்ல ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்க கலந்துகொண்ட கூட்டங்களிலும் அதே நிலைமைதான். வெலிவேரிய துப்பாக்கிச் சூடு தொடர்பாக கொழும்புக் கோட்டையில் அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கூடியவர்களை விட அதிக கூட்டம் கூடியது. நல்லூர்க் கந்த சுவாமி கோயிலுக்கருகில் நடைபெற்ற கூட்டத்துக்கு- அங்கு நடந்த இசை நிகழ்ச்சிக்காக முதலில் மக்கள் திரண்டாலும் கடைசிப் பேச்சாளருக்குப் பின்னர் ரணில் உரை நிகழ்த்தும் வரை மக்கள் காத்திருந்தார்கள். அதேபோல் த.தே.கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் பேசிய கூட்டங்களுக்கும் பெருந்திரளாக மக்கள் கூடுவதைக் காண முடிகிறது.

இந்தக்கால அரசியல் நிலைமைகளில் மக்கள் திரள்வதை வைத்துக் கொண்டு கட்சிகளுக்கான ஆதரவை தீர்மானிப்பது பொருத்தமில்லைதான். இருந்தாலும் வடக்கின் ஜனநாயக அரசியலில் மக்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தை இது காட்டுவதாகக் கொள்ள முடியும்.

வடக்கில் தேர்தலில் கடும் எதிர்-புதிர் நிலைமைகளில் சிக்கியுள்ள இரண்டு தரப்புகளான த.தே.கூட்டமைப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியும் வடக்கில் அன்றி கொழும்பிலேயே தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டிருப்பது போல் தெரிகின்றது.

இது இரண்டு தரப்புக்கு இடையிலான இடைவெளியை மேலும் அகலமாக்கி விடக்கூடும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. இது ஏறத்தாழ 2002 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட இடைக்கால சுய ஆட்சி அதிகாரசபை தொடர்பான போர் ஓய்வு ஒப்பந்தத்தையடுத்து எழுந்த சர்ச்சையைப் போன்றதொரு நிலையாகக் காணப்படுகின்றது.

த.தே.கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமானது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அளவுக்கு செல்லாது போனாலும் 1979 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரதான அம்சங்களை அது கொண்டிருக்கின்றது. அதன் பிரதான அம்சமாவது "சுய நிர்ணயம்" பற்றியதாகும். அது ஐக்கிய இலங்கைக்குள்ளான சமஷ்டி கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை த.தே.கூ. தனது விஞ்ஞாபனத்தில் இணைத்துக் கொண்டுள்ளது. கூட்டமைப்பு விஞ்ஞாபனத்தில் அரசு தரப்புக்கு கோபம் மூட்டியுள்ள சில அம்சங்கள்.

வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி கட்டமைப்புக்குள்ளான ஓர் அலகுக்குள் அதிகாரப் பகிர்ந்தளிப்பு இடம்பெறவேண்டும். அதில் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் ஏற்புடைய தன்மை பெற்றிருத்தல் அவசியம். பகிர்ந்து கொள்ளப்படும் இறைமையின் கீழான அதிகாரப் பரவலானது நிலம், சட்டம் மற்றும் ஒழுங்கு, சுகாதாரம், கல்வி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் ஆகியவை உள்ளடங்கிய சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பானதாக அமைய வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஆயுதப்படைகள், ராணுவ உபகரணங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு கட்டுப்படுத்தப்பட்ட வலயங்கள் ஆகியவற்றை அகற்றி 1983 இல் போர் தொடங்குவதற்கு முன்னிருந்த நிலைமையைத் தோற்றுவிக்கும் வகையில் அர்த்தமுள்ள வகையில் ராணுவ மயமாக்கல் நீக்கப்படவேண்டும்.

இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளினால்போரின் இறுதி காலகட்டங்களில் இழைக்கப்பட்டதான சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மையும் நீதியும் நிலைநாட்டப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு போன்ற பரிகாரங்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும். காணாமற்போயுள்ள ஆயிரக் கணக்கானவர்கள் தொடர்பான பிரச்சினைகள் முடிவு காணப்பட்டு அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்திலிருந்து அரசு நீக்கிவிட எத்தனித்துக் கொண்டிருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்தும் கூட்டமைப்பு விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. பொலிஸ் படையானது மாகாண சபையினால் இயக்கப்பட்டால்மட்டுமே வினைத்திறனாக அமைவதாய் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பில் தற்போது காணப்படும் அதிகாரங்கள் அவ்வாறே இருக்க வேண்டும் என்பதே த.தே.கூட்டமைப்பின் விருப்பம். காணி உரிமை, கட்டுப்பாடு மற்றும் வடக்கு, கிழக்கில் மொழி மற்றும் கலாசார அடையாளங்களை குறிவைக்கும் பிரயோகம் தொடர்பான இப்போதைய கொள்கைகளில் சீர்திருத்தம் இல்லாவிடில் மீள் நல்லிணக்கமே ஏற்படுவது சாத்தியமில்லை என்கிறது த.தே. கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்.

அரசு தரப்பினருக்கு ஆத்திரமூட்டியுள்ள இன்னொரு விடயம் என்னவென்றால் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரான சி.வி. விக்னேஸ்வரன் தேர்தல் கூட்டமொன்றில் எல்.ரி.ரி.ஈ.தலைவர் பிரபாகரனை ஒரு வீரர் என்று குறிப்பிட்டிருப்பதாகும்.

எல்.ரி.ரி.ஈ. தலைவரின் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில்: நான் மட்டும் அவ்வாறு கூறவில்லை. நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரை ஒரு வீரராக ஒப்புக்கொண்டுள்ளார். பிரபாகரன் உயிருடன் இருந்தபோது 13 அரசமைப்புக்கு மேலாகவும் தருவதற்கு ராஜபக்ஷ முன்வந்தார். இப்போது பிரபாகரன் இல்லை ஜனாதிபதி இப்போது 13க்கு மாறாக பேசுகிறார். அது மட்டுமல்ல 13 ஆவது திருத்தம் என்றே ஒன்றுமில்லை என்று சொல்லுமளவுக்குப் போய்விட்டார். இது ஏன் என்றால் பிரபாகரனை ஒரு வீரனாக அவர் ஏற்றிருந்தார். அப்போது தமிழருக்குச் சலுகைகளை வழங்க முன்வந்தார். இப்போது அதற்கு அவர் தயார் இல்லை.

இப்பொழுது பெரும்பாலானவர்கள் பேசிக் கொள்ளும் விடயம் என்னவென்றால் த.தே.கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றியை சாதிக்குமா என்பதே.

அரச தரப்பு பல அமைச்சர்களின் ஆதரவுடன் அவ்வாறு நிகழக் கூடாது என்ற வகையிலேயே பிரசாரங்களை முடுக்கி விட்டி ருக்கிறார். அது நிகழுமானால் தொடர்ச்சியான அரசியல் பிரச்சினைகள் உருவாகக் கூடும். த.தே.கூட்டமைப்பு பதவிக்கு வந்தவுடன் பொலிஸ் காணி அதிகாரங்களைக் கோரி நிற்கும் என்று கூறுவதற்கில்லை. அப்படியான கோரிக்கையை முறியடிப்பதற்கான பலமான நிலையில் அரசு இருக்கிறது. அவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவிக்கு வரும் பட்சத்தில் வடமாகாண சபை ஆளுநரை பதவி நீக்கி ராணுவத் தொடர்பு இல்லாத ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்தும்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதே அதன் முக்கிய பணியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நாடகப்போட்டி

அச்சுவேலி, செப்.16

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 27 சிறுவர் கழகங்கள் இடையே சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டி வலி. கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

'சிறுவர் பாதுகாப்புக்கு அவர்களின் திறன்களை பயன்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற நாடகப் போட்டியில் அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்நத



செங்கதிர் சிறுவர் கழகம் முதலாம் இடத்தையும், புத்தூர் கிழக்கு அலுவலர் பிரிவைச் சேர்ந்த புதுமலர்கள் சிறுவர் கழகம் இரண்டாம் இடத்தையும், புத்தூர் மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நந்தவனம் சிறுவர் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட "செங்கதிர் சிறுவர் கழகம்" யாழ். மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற்றுள்ளது. (ந-11)

## சிறகுகள் சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி கல்வி வலயத்தின் 'சிறகு கள்' அரையாண்டு சஞ்சிகை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கல்வி வலயத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான அரை யாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் இக்காலப் பகுதியில் வலயக் கல்வி அலுவலகத்தால் ஒழுங்கு படுத்தப்பட்ட விழாக்கள், ஆரம்ப நிகழ்வு கள், சுற்றுலா அனுபவங்கள் உள்ளீட்ட விடயங்களை உள்ளடக்கிய சஞ்சிகையாக வெளிவரவுள்ளது. (வ-9)

## தீவக வலய சிற்றூழியர்களுக்கு சீருடைப் படிகள்


யாழ்ப்பாணம், செப்.16

புதிதாக நியமனம் பெற்ற சிற்றூழியர்கள் தவிர்ந்த ஏனைய சிற்றூழியருக்கான சீருடைப் படிகள் வழங்கப்படவுள்ளன. சம் பந்தப்பட்ட ஊழியர்கள் சீருடைப் படி பெறுவதற்கான கோரிக்கை கடிதத்தை விரைவில் வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்குமாறும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் அறிவித்துள்ளார்.

22.4.2013 திகதியிடப்பட்ட 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சீருடைக்கான படிகள் வழங்கப் படவுள்ளன.

வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தங் கள் பாடசாலையில் கடமை நேரத்தில் சீருடை அணிவதற்கான அறிவுறுத்தல் களை வழங்கி மேற்பார்வை செய்து உறுப் படுத்திக் கொள்ளுமாறு தீவக கல்விப் பணிப்பாளர் தீவக பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (வ-7)

# மக்கள் வெள்ளத்தில் பவனி வந்தாள் துர்க்கையம்மன்





தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பக்திபூர்வமாக இடம்பெற்றது. நேற்றுக் காலை 8.45 மணியளவில் வெளிவீதிக்கு பிரவேசித்த துர்க்கை அம்மன் சித்திரத் தேரில் வீற்றிருந்து வீதியுலா வந்த காட்சி அற்புதமாக இருந்தது. தேர்த் திருவிழாவுக்கு குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர். வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கானோர் அம்மனை தரிசிக்க வந்திருந்தனர். நூற்றுக் கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்ததுடன் பெண்கள் அடியழித்தும் கற்பூரச்சட்டி எடுத்தும் தூக்குக் காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திகளை நிறைவு செய்தனர். வழமைபோன்று இம்முறையும் தேரின் பின்னால் துர்க்காதேவி மகளிர் இல்லப் பிள்ளைகளின் பஜனை மற்றும் அடியவர்களின் பஜனைகளும் இடம்பெற்றன. (ஒ-86)

## சாவகச்சேரியில் இன்று கூட்டமைப்பின் கூட்டம்

தென்மராட்சி, செப்.16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலைய வளாகத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் வேட்பாளர் கேசவன் சயந்தன், சட்டத்தரணி நடராசா காண்டீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், மாவை.சேனாதிராசா, இரா.சம்பந்தன், முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். அருணா இசைக்குழுவின் எழுச்சிப் பாடல்களும் இடம்பெறும். (ஒ-9)

கைதடி முதியோர் இல்லம் முன்பாக

## நிழற்குடைகள் அமைக்கப்படுமா?

குருநகர், செப்.16

கைதடி அரச முதியோர் இல்லத்தின் முன்பாக உள்ள வீதியின் இரு பக்கங்களிலும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரித்து நின்று பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கான தரிப்பிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும் பிரயாணிகள் பாதுகாப்பாக நிற்பதற்கான நிழற்குடைகள் எவையும் இதுவரை அமைக்கப்படாததால் பயணிகள் வெயிலிலும் மழையிலும் இருப்பிட வசதியில்லாமல் அந்தரிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லம் அமைந்துள்ள சுற்றுப்புறத்தின் அரச வடிசாலை வீதியில் கைதடி ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம் வடமாகாண சேவைகள் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், கைதடி நவீல்ட் பாடசாலை ஆகியவைகள் அமைந்துள்ளன.

பாடசாலை மாணவர்களும் அரச ஊழியர்களும் தமது கடமைகளை நிறைவேற்றிய பின் பஸ்ஸுக்காக கால்கடுக்க நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அநதப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## மலருக்கு ஆக்கம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், செப். 16

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வெளியிடப்பட வுள்ள சிவயோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசை விழா மலருக்கான ஆக்கங்கள் கோரப் பட்டுள்ளன. ஆக்கங்களை அனுப்பவிரும்புவோர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் னதாக பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன் றம் , 9 1/5 சேர் சிற்றம்பலம் , ஏ.கார்டினர் மாவத்தை கொழும்பு -2 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (வ-14)

# கருவாடு பதனிடும் நிலையம்
## பயனாளிகளிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.14

பாசிக் நிறுவனத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கருவாடு பதனிடும் 2 நிலையங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களது வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒவ்வொன்றும் 2 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் மணற்காடு, கட்டைக்காடு ஆகிய இரண்டு கிராமங்களிலும் பதனிடும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையத்தின் ஊடாக பயனாளிகள் சுகாதாரமான முறையில் கருவாடு பதனிடலை மேற்கொண்டு அதற்கான சந்தை வாய்ப்பை உள்ளூரிலும் வெளியூரிலும் பெற்றுக் கொள்ள ஏதுவான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பெண்கள் அதிகளவு இதனூடாக பயனடைந்துள்ளனர். (வ-14)



## ஸ்கான் கிளினிக் செப்.30 இல்

தென்மராட்சி, செப்.16

சாவகச்சேரி ஆதார வைத் திய சாலையில் ஸ்கான் கிளினிக் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)




## 10 கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம்

தென்மராட்சி, செப்.16

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பன்னிரண்டு கிராமங்களில் 10 கிலோமீற்றர் தூரத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பங்கள் இடும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.சர்வானந்தனின் வேண்டுகோளுக் கிணங்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சக்தி அமைச்சரால் நிதி ஒதுக்கப்பட்டு கச்சாய் கடற்கரை வீதி (1 கி.மீ.), பாலாவி வடக்கு (1 கி.மீ), பாலாவி தெற்கு (1 கி.மீ) தவசிகுளம், நாச்சிமார் வீதி (1 கி.மீ.), மருதங்குளம் மக்கள் கடை வீதி (1 கி.மீ.), குடமியன் இரட்டையர் குளம் வீதி (½ கி.மீ) குடமியன் சிவன் கோயில் வீதி (½ கி.மீ) கரம்பைக்குறிச்சி (1 கி.மீ.), இடைக்குறிஞ்சி (1 கி.மீ.), தாவளை-இயற்றாலை (1 கி.மீ), கோவிலாக்கண்டி (1 கி.மீ.) கோயிலாமனை (1 கி.மீ.) ஆகிய வீதிகளில் மின் கம்பங்கள் பறிக்கப்பட்டு நடும் பணிகள் இடம் பெறுகின்றனர். (வ-9)



மின் கம்பங்கள் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டுள்ளன. மின் கம்பங்கள் நடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாதரவத்தை-அந்திரானை

## இணைப்பு வீதி விரைவில் திருத்தம்

அச்சுவேலி, செப்.16

வலி.கிழக்குப் பிரதேச சபை 'நெல்சிப்' நிதிமூலம் வாதரவத்தை -அந்திரானை இணைப்பு வீதி 13.62 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

குறித்த வீதி பெருமளவில் சேதமடைந்த நிலையில் காணப் படுகின்றது. இதனைத் திருத்தி அமைப்பதற்கான அனுமதி கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற வலி.கிழக்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்டது. இதற்கு 13.62 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 'நெல்சிப்' நிதி 79.62 மில்லியன் ரூபா மூலம் இந்த வருடம் ஆறு வீதிகள் திருத்தி அமைக்கப்பட வுள்ளன. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் ஆண்டு ஐந்து



திருமதி

## அன்னை சிவகாமி மகாதேவன்

(இளைப்பாறிய தபால் அதிபர்,
முன்னாள் நயினை ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் அறங்காவலர்)

**திதி: 16.09.2013**

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"*

அன்னையே! ஐந்து ஆண்டுகள் என்ன ஐயாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் அன்பு ஆசை முகம் மறக்குமோ! எம் நெஞ்சம்
மறக்கவே மறக்காது உமது சின்னச்சின்னக் குறும்புகள்
சின்னச் சின்னக் கதைகள் நீங்கள் எங்களுக்கு அன்பான மனைவியாய்
பிள்ளைக்கு அறிவூட்டும் தாயாக இன்சொல்லால் சுற்றத்தாரை அணைத்து
உங்கள் இனிய புன்னகையால் யாவரையும் உங்கள் வசமாக்கி
வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள்! அல்லும் பகலும்
எங்களுக்காகவும் உறவுகளுக்காகவும்
அயராது பாடுபட்டு எங்களை ஏணி மேல் ஏற்றிவைத்து விட்டு
ஏனோ நீங்கள் மட்டும் மாயமாக மறைந்து போனீர்கள்!
எங்கள் அன்னையே அறிவூட்டிய தாயே! இப்பிறவியென்ன
ஏழேழு பிறவிக்கும் எங்கள் நெஞ்சங்களில் நீங்கா
இடம்பிடித்து நயினை நாகபூஷணி அம்மன்
அடிசேர்ந்த அன்னையே! என்றும் உந்தன்
அன்பும் அருளும் கிடைக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி
அம்பிகையை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**குறிப்பு:**

அன்னையின் நினைவாக ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் மோட்ச அர்ச்சனையும் அன்னதானமும், ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் ஒரு நாளைக்கான உணவும், பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும், முதியோர்களுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்படும்

**சி. மகாதேவன்** (கணவர்),
**அன்னை சிவகாமி கல்வி நிலையம்,**
**நயினை - 3.**
**தொ.பே. 077 817 7706**

**மகா சத்தியரூபன்** (மகன் – கணக்காளர்),
**பாலராஜி** (மருமகள்),
**சிவரூபா** (பேர்த்தி),
M.S.R.Accounting,
M.S.R. House,
329, Ley Street.
U.K.

(31801) (453.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டணம்

கொழும்பு.செப்.16

வெளி இடங்களிலிருந்து கொழும்பு நகருக்குள் நுழையும் சகல வாகனங்களுக்கும் கட்டணத்தை அறவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இதனை உள்ளடக்குவது தொடர்பாக அரசால் ஆராயப்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்துக்கமைய காலி வீதி, கண்டி வீதி மற்றும் நீர்கொழும்பு வீதிஅடங்கலாக கொழும்புக்குள் வாகனங்கள் நுழையும் சகல வீதிகளிலும் இதற்காக விசேட நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் நிலையங்களில் கட்டணத்துக்கான பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன், அந்த வாகனங்கள் வெளியேறிச் செல்லும் வரை கவனமாக வைத்திருக்க வேண்டிய நடைமுறை பின்பற்றப்படவுள்ளது.

★ இத்தாலி சட்டரீதியாகச் செல்ல ஆலோசனை

★ நோர்வே, ஜேர்மனி, சுவிஸ் சட்டரீதியான நுழைவிற்கு துரித ஆலோசனை

★ டென்மார்க்கில் படிக்க, 250,000/= வரை உழைக்க ஆலோசனை

★ உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்.

★ கொலண்டில் படிக்க 200,000/= வரை உழைக்க ஆலோசனை

★ உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்.

★ மலேசியாவில் படிக்க, 65000/= வரை உழைக்க சட்ட ஆலோசனை

*வெறும் 300000/= மட்டும் போதுமானது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(31828)(4,6,3)

சாதனையாளர்களை வாழ்த்துகின்றோம்



செல்வன் மு.முரளிதரன் BEST WISHES செல்வி ம.மதூரிகா

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில்
பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த
வீர வீராங்கனைகளான
செல்வன் மு.முரளிதரன், செல்வி ம. மதூரிகா ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.
அவர்கள் மேலும் பல சாதனைகளைப் படைத்துப் பாடசாலைக்கு
பெருமையைப் பெற்றுத்தர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

பாடசாலைச் சமூகம்
(யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்) (31784)(4,6,7)

SAVE 35,000 In Diploma

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரே ஒரு ACCA Gold Approved அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

( அதி சிறந்த கற்பித்தலுக்கான அங்கீகாரம் ACCA U.K)

KAIMS

புதிய பிரிவுகள் 24th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422

COLOMBO 0772 555 814

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



☞ வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து
☞ இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
☞ ஆகாய, கடல் மார்க்கமாக
☞ அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மையுடன்,
வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

இடம் : மானிப்பாய் செல்லமுத்து மைதானம்
காலம் : இன்று (16.09.2013) திங்கட்கிழமை மாலை 5.00 மணி
தலைமை : கௌரவ மாவை.சோ.சேனாதிராசா நா.உ

சிறப்புரைகள் :

கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
முன்னாள் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் (முதன்மை வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.ஏ. சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ பொன். செல்வராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ பா. அரியநேத்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)

மற்றும் அதிதிகள் உரைகளும் இடம்பெறும்.

அலை அலையாய் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

அதேபோல் செப்ரெம்பர் 21 அதிகாலையில் எழுந்து வந்து தமிழின விடிவுக்காக
எழுதுகோல் எடுத்து வாக்களித்து வரலாறு படையுங்கள்

* அழிந்து போன எம் தேசத்தையும் வீழ்ந்து போன எம் சமுதாயத்தையும் மீளக் கட்டியெழுப்புவோம்.
* எங்கள் வீட்டுக்கு நாம் போவோம், எம் மண்ணை நாம் ஆளுவோம்
* வாழ்வுரிமைக்காக போராடுவோம். சுதந்திரம் எம் பிறப்புரிமை. எம் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவோம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் மூன்று இடங்கள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான சிறுவர் நாடகப் போட்டிகள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:
முதலாம் இடம்-கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை. இரண்டாம் இடம்-சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை. (ந-9)

**பணியாளர் தேவை**

பெயின்ற் விற்பனை நிலையத்திற்கு பெண் பணியாளர் தேவை.
தொடர்பு: சோதி ஸ்ரோர், ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.
077 789 0398 (31826) (3.11.6)

**காணி விற்பனைக்கு உண்டு**

நல்லூர்,
36/8, பண்டாரக்குளம்,
மேற்கு ஒழுங்கையில்
(31693) (4.6.3) 7¾ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 761 3068

### தொழிலுக்குச் சென்றவரை தீண்டியது பாம்பு

அதிகாலையில் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்ற குடும்பஸ்தர் விஷப் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை அதிகாலை வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த தம்பிஐயா இராசரத்தினம் (வயது-64) என்பவர் பாம்பினால் கடியுண்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார். (ந-9)

**தவறிவிட்டது** NP.KK XXXX தொடரிலக்க முடைய கார் இலக்கத்தகடு 14.09.2013 அன்று சுட்டைப் பிராய்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (31819) (4.6.3)
தொடர்பு: 077 122 0916, 077 229 9924

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது. 1kg 400/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு.
விஜயகுமார் குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை. (31805) (4.6.3)
077 315 1723.

## தொடர்பாடல் தொழில்நுட்ப மைய திறப்பு விழா இன்று

அச்சுவேலி, செப்.16
அச்சுவேலி வடக்கு கதிரொலி சனசமூக நிலையத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மைய திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.
பிரதம விருந்தினராக தொலைத் தொடர்பாடல் தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டியா கலந்து கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமையத்தின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பார்.
சிறப்பு விருந்தினராக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாம் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி றொசாந் தேவபுர கலந்து கொள்கின்றார். (ந-11)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980, நட்சத்திரம் மகம் முதலாம் கால், 7 இல் செவ்வாய் கிரகபாவம் 16½ விஞ்ஞான ஆராய்ச்சி உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: 077 196 2054

**அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு பிற்போடல்**

25 ஆவது யுபிலி ஆண்டு நிறைவை முன்னிட்டு மிருசுவில் பழையவாய்க்கால் தூய வேளாங்கண்ணி ஆலய கட்டட புனரமைப்பு நிதிக்கான 14.09.2013 சனிக்கிழமை அதிர்ஷ்டம் பார்ப்பதற்கு இருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 26.10.2013 சனிக்கிழமை அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

PARISH PRIEST
St.Nicholas Church
Mirusuvil.N.P. Sri Lanka. (31820) (3.6.11) பங்குத்தந்தை.

CIMA
அதி சிறந்த வசதிகளுடன் கூடிய
முற்றிலும் மாறுபட்ட முறையில்,
தொழில் சார் கற்கைநெறியில் அனுபவம் உள்ள
விரிவுரையாளர்களுடன் CIMA-UK கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
K-AIMS
புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்
35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna
JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
Yaarl Kalaa layah Academy
Victoriya Road, Jaffna

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல் ✌ *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் ✌ முக அழகுக் கலை (Facial) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) Nail art, மெஹந்தி போடுதல் ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல், ✌ (B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் தையல் பயிற்சிகள்.
ஆரம்பமாக உள்ள கிழமை நாள் /சனி ஞாயிறு புதிய பிரிவுகளில் சேர விரும்புவோர் நேரில் வந்து விபரங்களை கேட்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
இயக்குநர்

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2012 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 08.10.2013 இலிருந்தும், 31.10.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள், எதிர்வரும் 11.11.2013 இலிருந்தும் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(வி/12408)(5-6-3)

வெல்லுக மகாஜன மாதா

## நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அதிபர் அவர்களின் நூறாவது பிறந்த தின விழாவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டு போட்டிகள்



உதைபந்து
கிரிக்கெட்
கரப்பந்து
வீதி ஓட்டம்
சதுரங்கம்

**1) வீதி ஓட்டம்:** பாடசாலை மட்டம்

**ஆண்கள்**-15km
**பெண்கள்**-10km
**வயதெல்லை**-15 வயதிற்கு மேல்-21 வயதுக்குட்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள்
**விண்ணப்பம்**- பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 18.09.2013 அன்று அல்லது அதற்கு முன்பாக அதிபர்,யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை (வீதியோட்டம்) எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
**போட்டி நடைபெறும் திகதி-24.09.2013 காலை 6 மணி**
**ஆரம்பிக்கும், முடிவடையும் இடம்-மகாஜனக் கல்லூரி**
**முக்கிய குறிப்பு-போட்டி நடைபெறும் திகதி அன்று மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

முதலாம் இடம்-5000/=
2 ஆம் இடம்-3000/=
3 ஆம் இடம்-2000/=

**2) சதுரங்கப் போட்டி**

ஆண்/பெண் தனிப்போட்டிகள்
**வயதுப்பிரிவுகள்**-15 வயதின் கீழ், 19 வயதின் கீழ்
**விண்ணப்பம்**- பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 18.09.2013 அன்று அல்லது அதற்கு முன்பாக அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை (சதுரங்கப்போட்டி) எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
தொடர்புகளுக்கு -077 711 1730

முதலாம் இடம்-3000/=
2 ஆம் இடம்-2000/=
3 ஆம் இடம்-1000/=

உதைப்பந்து, கிரிக்கெட், கரப்பந்து ஆகிய போட்டிகள் அழைக்கப்பட்ட அணிகளுக்கானது என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**3) உதை பந்தாட்டப் போட்டி**

ஆண்களுக்குரியது
**வயதுப்பிரிவுகள்**-19 வயதின் கீழ்
**விண்ணப்பம்**- பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 18.09.2013 அன்று அல்லது அதற்கு முன்பாக அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை (உதைப்பந்தாட்டப்போட்டி) எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
**போட்டி நடைபெறும் திகதி-18.09.2013**

முதலாம் இடம்-10000/=
2 ஆம் இடம்-7000/=
3 ஆம் இடம்-5000/=

**4) கரப்பந்தாட்டப்போட்டி**

ஆண், பெண் இருபாலாருக்குமுரியது
**வயதுப்பிரிவுகள்**-19 வயதின் கீழ்
**விண்ணப்பம்**- பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 18.09.2013 அன்று அல்லது அதற்கு முன்பாக அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை (கரப்பந்தாட்டப்போட்டி) எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
**போட்டி நடைபெறும் திகதி-18.09.2013**

முதலாம் இடம்-10000/=
2 ஆம் இடம்- 7000/=
3 ஆம் இடம்-5000/=

(C/12439) (3.6.11)
நூறாவது பிறந்த தின விழாச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 21 'நெனசல' அறிவகங்கள் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், செப்.16

தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சினால் வட மாகாணத்தில் 41 'நெனசல' அறிவகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு 'நெனசல' அறிவகம் என்னும் ரீதியில் சகல தொலைத் தொடர் பியல் வசதிகளையும் கொண்ட அறிவகங்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. இதற்கான சகல உபகரணங்களும் அமைச்சினால் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 21 அறிவகங்கள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளன.

இந்த நிகழ்வுகளில் தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய முதன்மை விருந்தினராகவும், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலைய பிரதம நிறைவேற்று அதிகாரி ரொசான் தேவப்புர சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது வித்தியாலய ஸ்தாபகர்
அமரர் இ.சிதம்பரநாதர்
அவர்களின் செல்வப்புதல்வி
திருமதி லீலா சண்முகலிங்கம்
17.08.2013 காலமாகியதையிட்டு
இன்றும்
துடிக்கும் நெஞ்சும்
நீண்ட விழியும் துயரங்களும்
வரிகளில் வடித்து விடத்தான் முடியுமா?
மரணமென்னும் விலைக்குள்
மனிதம் விழ்வது நியாயம்!
அன்னாரின் நல் ஆத்மசாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கின்றோம்

(31763)(4.3.6) பள்ளி சமூகம்
(யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்)

## உரமானிய விநியோகம்

தென்மராட்சி, செப்.16

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளருக்கான உர மானியப் படிவங்கள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 19ஆம் திகதி படிவங்கள் க்மநல சேவைகள் நிலையத்தில் கையளிக்கவுள்ளதால் இதுவரை பதிவு செய்யாதவர்கள் கமநல சேவைகள் நிலையத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் வயலுக்கான வரிப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வருகை தந்து படிவத்தினைப் பூர்த்தி செய்து வழங்குமாறு அமைப்பின் தலைவர் இ.நவரத்தினராசா அறிவித்துள்ளார். (ந-9)

## மரண அறிவித்தல்

### செல்வி செல்லத்துரை இராஜேஸ்வரி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லத்துரை- செல்லம்மா தம்பதியரின் புத்திரி செல்வி செல்லத்துரை இரஜேஸ்வரி 15.09.2013 அன்று காலமானார்.

அன்னார் சோதிப்பெருமாள்(J.Pஇளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், பூமலர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2013) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

"சரஸ்வதி மகால்"
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.
021-4921551.

(31822)(4.6.3)

தகவல்:
செ.சோதிப்பெருமாள்
(சகோதரன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி சவுந்தரம் வேலுப்பிள்ளை



தோற்றம்
26.05.1934

மறைவு
17.08.2013

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பின்லாந்து, ஜேர்மனி தற்போது யாழ்ப்பாணம் - நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த எமது தாயை நினைத்து....

தாயாகி எம்மை உதரத்தில் தாங்கியுன்
ஊனுறக்கந்துறந்து உற்ற தெய்வம் தொழுது
நோயிலும் பிணியிலும் உனையுருக்கியெமை
ஆதரித்தும் பேணி அறிவுதந்தும் வளர்த்தெடுத்து
வாய்மை காத்து வளமாக வாழவைத்து எமையெல்லாம்
வழிநடத்திய அன்புத் தெய்வம்
எத்தனை ஆண்டுகள் தான் கடந்தாலும் உம்
நினைவு எம் மனதைவிட்டு அகலாது.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறி தேற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோருக்கும், எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கின்போது கலந்துகொண்டு பல்வேறு வகைகளிலும் உதவி, ஒத்தாசை நல்கியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"இறைவன் அடியில் உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்"

நல்லூர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(31521)(45.6.3)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி சரோஜா சர்வேஸ்வரஐயர்



யாழ்ப்பாணம் வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாவும் கொண்ட ஸ்ரீமதி சரோஜா சர்வேஸ்வரஐயர் நேற்று முன்தினம் (14.09.2013) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ந்த சுப்பிரமணியசர்மா- மங்களாம்பிகை அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சர்வேஸ்வர ஐயரின் மனைவியும், கமலாம்பிகை, சோபனா, பத்மநாபன் (மோகன்), கல்பனா ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம், சுதாகரன், உருத்திரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும் சரண்யன், ஷர்மி, சந்தியா, ஷயனிகா, சாருஜன், ருத்ராஷன், அஜன், அனுஜன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் மங்கள ராஜேஸ்வரி அம்மாள் மற்றும் காலஞ்சென்றவர்களான நாகராசசர்மா, கண்ணலிங்க சர்மா, இராமசந்திர சர்மா, கணேசசர்மா, பாலாம்பிகை அம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிளவில் பூதவுடல் தனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100, செட்டித் தெரு,
நல்லூர்.

(31825)(6.3.11)

தகவல்: ச.பத்மநாபன் (மகன்)
0773583903

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயமனோகரி மனோகரன்



யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், நோர்வே, ஒஸ்லோவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயமனோகரி மனோகரன் கடந்த (13.09.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மனோக ரன் அவர்களின் அன்பு மனைவியும், துர்கா, துளசி ஆகியோரின் அன்புத் தாயாரும், விவேகானந்தன் அவர்களின் அருமைச் சகோதரியும், கனகநாயகம், குகதாசன்(ஓய்வுபெற்ற கணக்காய்வுப் பணிப்பாளர் வட மாகாணம்), இராசநாயகி(சுவிஸ்), இந்திராணி, பிரபாகரன்(G.S உடுவில்), பாஸ்கரன்(அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனியும்,சாந்தினி, மாதினி, செல்வி, ஆனந்தி, தனபாலசிங்கம், சிவஜானம் ஆகியோரின் சகலியும்,மயூரன், பலோசணன் (ஆஸ்திரேலியா), சங்கீர்தனன், பவதாரணி, நந்தினி, வரோதயன், யசோ ஆகியோரின் சித்தியும்,வசாங்கன், ஆதவன், தாருண், தாருணி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், சதீஸ், கோவிராஜ், ஆரூரன், பிரணவன், பவித்திரா, கரிகாலன், கரிகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நோர்வே.

(c/12457)(3.8.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையைவசிப்பிடமாகவும்கொண்ட ஆச்சிமுத்து பொன்னம் பலம் நேற்று (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கால்ஞ்சென்றவர்களான விசாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்வரத்தினம் மற்றும் அருமைமுத்து, கமலம் (கனடா), சின்னத்துரை (கொழும்பு), சிவலோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வநாயகம் (கனடா), ஜெயராஜா (வவுனியா), தேவதாஸ், சிறீராதா, சிறீரஞ்சினி, சிவதாஸ் (கனடா), சிறிரதி, சிறீதரன் (சுவிஸ்), சிறிராஜினி (டென்மார்க்), சிறிரஜனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சௌபாக்கியவதி (கனடா), காஞ்சனாதேவி (வவுனியா), குணநாயகி, கைலநாதன் (வவுனியா), சிவபுத்திரன், ராஜேஸ்வரி (கனடா), கௌரீஸ்வரன், ஞானசோதி (சுவிஸ்), சிவரூபன் (டென்மார்க்), நிமலேந்திரன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2013) திங்கட்கிழமை மு.ப.11மணியளவில் ஈஞ்சடி வைரவர் கோயிலடி, உடுவில் தெற்கில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய், (ஈஞ்சடி வைரவர் கோயிலடி)
077 611 4108

(31521) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும் மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:** பொறுமையை இழப்பீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கடகம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும்.

**கன்னி:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**நாளை**

புரட்டாதி-01 செவ்வாய்க்கிழமை 17.09.2013
திதி: திரயோதசி மு.இ. 08.49 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.09.16 வரை
சுபநேரம்: 10.33 - 12.03 வரை
இராகுகாலம்: 03.03 - 04.33 வரை

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**விருச்சிகம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**மகரம்:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்கள் வாயைக் சிலர் கிளறி வேடிக்கைப் பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**கும்பம்:** எதையும் திட்டமிட்டுச் செய்யப் பாருங்கள். யாருக்காகவும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மீனம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். வியாபாரத்தில் நம்பிக்கைக் குறியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | |
| | 2 | 8 | | | | 9 | | |
| | 3 | 1 | | 8 | | 6 | 4 | 5 |
| | 5 | | 3 | 9 | | | 7 | |
| 2 | 9 | 4 | | 5 | | 1 | 6 | 3 |
| | 7 | | | 4 | 6 | | 2 | |
| 5 | 1 | 2 | | 7 | | 3 | 9 | |
| | | 9 | | | | 8 | 1 | |
| | | | | | | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 9 | 6 | 5 | 8 | 2 | 4 |
| 8 | 9 | 4 | 7 | 3 | 2 | 1 | 6 | 5 |
| 5 | 6 | 2 | 1 | 4 | 8 | 7 | 3 | 9 |
| 4 | 2 | 8 | 3 | 9 | 1 | 5 | 7 | 6 |
| 6 | 5 | 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 3 |
| 1 | 7 | 3 | 5 | 2 | 6 | 4 | 9 | 8 |
| 7 | 8 | 1 | 6 | 5 | 3 | 9 | 4 | 2 |
| 2 | 4 | 6 | 8 | 7 | 9 | 3 | 5 | 1 |
| 9 | 3 | 5 | 2 | 1 | 4 | 6 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

விண்ணப்பித்து விட்டீர்களா?

கேர்வே

வழங்கும் இலவச புலமைப்பரிசில் திட்டங்களில் இணைந்து கொண்டு உங்கள் தராதரங்களை உயர்த்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.....

1 The English Language Scholarship Programme for School Students - Sponsored by John Keells Foundation
JOHN KEELLS FOUNDATION

2 Fundamental of Financial Services (FSS) for School Leavers- Sponsored by EKSP
ADB EKSP Education for Knowledge Society Project
CISI CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

3 Accelerated Skills Acquisition Programme (ASAP) for Job Seekers - Sponsored by EKSP
ADB EKSP Education for Knowledge Society Project
Skills for Life

விவரங்களுக்கும் விண்ணப்பப்படிவத்துக்கும் :

NEW GATEWAY TECH

District Head Office : 347, Kasthuriyar Road, Jaffna - Ph: 021 567 5555

Branches :

*New Market Building, Chavakacheri. Ph : 021 567 8444*

*55, Point Pedro Road, Nelliady. Ph : 021 226 2395*

*Karadipokku. Kandy Road, Kilinochchi Ph : 021 567 4433*

மேலதிக தகவல்களுக்கு :

0718 692 692

வேலணை வடக்கு இலந்தை வனப்பதி
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ
தேர்த்திருவிழா -2013



விக்கினங்கள் வராமற் காக்கவல்ல
வேலணையூர் இலந்தைவனம் உறை
சித்திவிநாயகரே
அக்கறையாய் வந்து வழிபாடு செய்தே
அர்ச்சித்தால் ஆசையெல்லாம் பூர்த்தியாகும்
பக்குவமாய் விழாவெடுத்துப் பூசைசெய்து
பலகாலம் பூசித்து வருகின்றோருக்கு
சிக்கல் எல்லாம் சீக்கிரமாய் தீரச்செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாயே

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 08.09.2013 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறுகின்றன. இந்த உற்சவத்தில் நாளை (17.09.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு இரதோற்சவமும் 18.09.2013 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்பதை அடியார்களுக்கு அறியத் தருவதுடன், உற்சவம் நிறைவடைந்த பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழா உபயகாரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### இராசையா சிறிவிக்னராஜா

(இளைப்பாறிய இலிகிதர் லங்கா சீமெந்து லிமிட்டட்)

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் கல்வளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிறிவிக்னராஜா நேற்று (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - மீனாம்பாள் தம்பதியினரின் அருமை மகனும் தேவமணியின் அன்புக் கணவரும் மேனகா (கனடா), சிறி சண்முகா (ஆய்வு உத்தியோகத்தர் Avvaya Research) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சிவவரதன் (கனடா), தயாளினி (ஆசிரியர் - யா/புனித ஹென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் மாமனும் வஜிதரன், கேதாரன், சிறிகணன் (Butterfly International School) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2013) திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவீத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.
(31833) (14-16-17)

தகவல்: சிறிசண்முகா
(மகன்).

## மரண அறிவித்தல்



### பெருமாள் மகாலிங்கம்

கோப்பாயை தெற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட பெருமாள் மகாலிங்கம் நேற்று (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள் மற்றும் செல்லமா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரின் (குஞ்சு) பாசமிகு கணவரும் ரஜீத்தின் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவன் 2013) தந்தையும் கந்தசாமி, தெய்வேந்திரராணி (புஸ்பா), தெய்வேந்திரராசா (ரவி), காலஞ்சென்றவர்களான துரைராசா, செல்வராணி ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகளை நாளை (17.09.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியடிச் சந்தை, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்

தகவல்: மனைவி, மகன்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்



### பொன்னம்பலம் சிவேஸ்வரி

அளவெட்டி வடக்கு, தட்டாகடவையைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி (சிவாஸ்லேன்) கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவேஸ்வரி 15.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியத்தின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.09.2013) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
(சிவாஸ் லேன்) கொக்குவில் கிழக்கு.
(c/12458)(3.6.11)
தகவல்:K.கண்ணன் (பேறாமகன்)

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் பிலோமினா (நவம்)



இல. 58, கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.10, கோயில் வீதி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பிலோமினா நேற்று(15.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான திரவியம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஞானப்பிரகாசத்தின் அன்பு மயைவியும், காலஞ்சென்றவர்களான எட்வேட் திரேசம்மா, அல்பிரட் மற்றும் இராச நாயகம்(பிரான்ஸ்) லில்லி, காலஞ்சென்ற பால சிங்கம், பெனடிக் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும, காலஞ் சென்றவர்களான பிலிப், அந்தோனிப்பிள்ளை, சின்னராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற வனிதா, ரவி(கொலண்ட்), காலஞ் சென்ற பாலா மற்றும் வனஜா(பிரான்ஸ்), சாந்தன், சுரேந்திரன் (பாலா வெல்டிங்- கராஜ் உரிமையாளர் , யாழ்ப்பாணம்), றஜிதா(பிரான்ஸ்), சதீஸ்(தம்பி பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், றெஜினோல்ட் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, சகாயரஜா(பிரான்ஸ்), சுகந்தி, லதா, சிறிதரன் (பிரான்ஸ்), டிலானி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கெனத் (பிரான்ஸ்), வினோத்(பிரான்ஸ்), பியற்றீஸ்(பிரான்ஸ்), நத்தாஷா(பிரான்ஸ்), சஷா(பிரான்ஸ்), எனுசி, டனுசன், ஷறோன், சரணியா, செசோன், ஜொறிஸ், ஜோர்தான், ஜெஸ்வின்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதணை இன்று(16.09.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 10, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(31831)(14.16.17)

தகவல்:
சாந்தன், சுரேந்திரன்
021 222 5745

### தெய்வானைப்பிள்ளை சின்னத்தம்பி



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானைப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், சிவமூர்த்தி (கனடா), புஸ்பராணி, கமலாதேவி, காந்திமலர்(கனடா), சாரதா (கனடா), சிவபாஸ்கரன்(லண்டன்)ஆகியோரின் அன்புத் தாயும், லீலா வதி, சுந்தரலிங்கம், திரவியநாயகம், கிருஷ்ணமூர்த்தி, சபாநாதன், சோபனா ஆகியோரின் அன்பு மாமியும், ஜினேஷ், அபிராமி, துஸ்யந்தினி, துவா ரகா, பிரியா, பிருந்தா, தர்சன், கஜனி, ஜசனி, தும்ஷிகா,றொஷானா, சுபாங்கன், பானுஜன், பிஜானி , தனோஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், சிந்துஜன், தனோஜன், கபிஷன்ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.09.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6183197,
077 4820512
(31831)(14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தவனம் சிதம்பரப்பிள்ளை (சம்பண்ணா)



கரவெட்டி மேற்கு குட்டி யப்பா வீட்டைப் பிறப்பிட மாகவும் கரவெட்டி கிழக்கு மருதங்கண்டை வசிப்பிட மாகவும் கொண்ட கந்த வனம் சிதம்பரப்பிள்ளை (சம்பண்ணா) நேற்று (15.09.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென் றவர்களான கந்தவனம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர் களான பெரியதோட்டம் கார்த்திகேசு-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு இலட்சுமியின் சகோதர னும், சிவராசாவின் (சிறி-லண்டன்) தந்தையும், மதிவதனியின் மாமனும், சினேகன், ஜனகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, நல்லதம்பி, சிற்றம்பலம் மற்றும் நடராசா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(31831)(14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பேதுருப்பிள்ளை மரியநாயகி(அன்னரத்தினம்)



மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேதுருப்பிள்ளை மரி யநாயகி நேற்று (15. 09.2013) ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து-அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாஸ்பிள்ளை -சலமைப்பிள்ளை தம் பதியரின்அன்பு மருமகளும், பேதுருப்பிள் ளையின் (நேசராசா)அன்பு மனைவியும், அமலதாஸ் (சகாயராசா -பிரான்ஸ்), சகாய ராணி(லண்டன்), யேசுதாஸ் (பவளராசா -பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பற் றீசியா(பொபி), அருள் நேசன் (லண்டன்), அஞ்சலா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற வர்களான உலு விஸ், பாக்கியம், பெனடிக்ஸ், சிங்கராசா, அந்தோனிபறுனாந்து (காணிக்கை ராசா) மற்றும் செல்வரத்தினம் ஆகியோரி ன் அன்புச் சகோதரியும், றெஜினா, பிலோமி னம்மா, பூமனி, காலஞ்சென்றவர்களான செபமாலைமரி, மனுவேற்பிள்ளை, மலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனித்தா, சயூனா(லண்டன்), அக்சயா, திலீப், றொபின்சன், ஜான்சி(பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவ ரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(31829)(14.16.17)

3ஆம் வட்டாரம், மண்டைதீவு.

பேதுருப்பிள்ளை (நேசராசா- கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் உரத் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படும் அபாயம்

## விவசாய அமைப்புக்கள் எச்சரிக்கை

கொழும்பு,செப்.16
எதிர்வரும் பெரும் போக நெற் செய்கையின்போது நாட்டில் உரத்தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உள்ளது என்று விவசாய அமைப்புக்கள் அபாய அறிவிப்பு விடுத்துள்ளன.

உரவகைகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே அரசால் வழங்கப்பட வேண்டியிருந்த பணத் தொகையில் இதுவரை ஒரு தொகுதிப் பணமே செலுத்தப் பட்டுள்ளது என்று விவசாய அமைப்புக்கள் தெரிவித்தன.

அதன் காரணமாக இந்த நிறுவனங்கள் இலங்கைக்கு உரங்களை இறக்குமதி செய்வதைத் தவிர்த்துக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளன என்று விவசாய அமைப்புக்கள் குறிப்பிட்டன.


பெரும் போகத்தில் விவசாயிகளால் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களில் சிறுபோகத்தின்போது அறுபது வீதமானவை மட்டுமே செய்கை பண்ணப்படுகிறது. இதன்மூலம் உர நிவாரணம் அதிகரிக்ககப்பட்டிருக்கவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றன. (ச-22)

# தொழில்நுட்பப் பாடம் இன்று முதல் ஆரம்பம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,செப்.16
ஜி.சீ.ஈ உயர்தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள தொழில்நுட்ப பாடநெறியைக் கற்பிக்கும் நடவடிக்கை, நாடளாவிய ரீதியிலுள்ள 250 பாடசாலைகளில் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பாடநெறியை 14 ஆயிரம் மாணவர்கள் கற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சின் செயலர் அனுரதிசாநாயக்க தெரிவித்தார்.



தொழில்நுட்பப் பாடநெறியை கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை நிறைவு பெறும் சந்தர்ப்பத்தில், தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக் கூடிய சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

இந்தத் தொழில்நுட்பப் பாடத்தை கற்பிப்பதற்கான பயிற்சிகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களின் ஆசிரியர்களும் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர்.

2016 ஆம் ஆண்டளவில் தொழில்நுட்பக்கல்வியை கற்று, உயர்தரத்தில் சித்தியடையும் மாணவர்களுக்கு மேலதிக கல்வியை தொடருவதற்கு, பல்கலைக்கழகங்களில் புதிய பாடத்திட்டங்களை உள்ளடக்கிய பீடங்கள் ஆரம்பிக்கப் உபடும் என்று கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார். (ச)

### நிதிக்கையாள்கை கணக்குகள் குறித்து

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகள் அடுத்த மாதம்

2012 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கையாள்கை கணக்கு வழக்குகள் சம்பந்தப்படும் விசாரணைகளை அடுத்த மாதத்தில் ஆரம்பிப்பதற்கு பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு (கோப்) தீர்மானித்துள்ளது.

அது தொடர்பாக தெரிவுக்குழு கூடவுள்ள நாள்கள் குறித்து செயற்றிட்டங்கள் தெரிவுக் குழு வின் அனைத்து உறுப்பினர்க ளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று நாடாளு மன்றச் செயற்குழுவின் தலை வர் சிரேஷ்ட அமைச்சர் டியு. குணசேகர தெரிவித்தார். இந்தத் தெரிவுக் குழுவின் விசாரணைக்கு உள்ளாகும் கணக்கு அறிக்கைகள் சம்பந்தமாக இனிவரும் காலத்தில் மூன்று மாதங்க ளுக்கு ஒரு தடவை நாடா ளுமன் றத்துக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார். (ச-22)



மட்டக்களப்பு. ஏறாவூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர். முனையவளவு வீதி நீண்ட நாள்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பாடசாலை சிறார்கள் பயணிப்பதில் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (ச)


17 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
01.10.1939

விண்ணில்
16.09.1996

அமரர் பூதர் இரத்தினம்
(முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

ஆண்டுகள் பதினேழு ஆகியும்
உங்கள் நினைவுகள் என்றும்
எமது உள்ளத்தை விட்டு அழியாது

தபாற்கந்தோர் அருகில்,
தெல்லிப்பழை.
(31823) (4.6.3)
குடும்பத்தினர்.


# கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டணம்

கொழும்பு,செப்.16
வெளி இடங்களிலிருந்து கொழும்பு நகருக்குள் நுழை யும் சகல வாகனங்க ளுக்கும் கட்டணத்தை அறவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.


அதற்கமைய அடுத்த வருடத் துக்கான வரவு- செலவுத் திட்டத்தில் இதனை உள்ளடக்கு வது தொடர்பாக அரசால் ஆராயப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்துக் கமைய காலி வீதி, கண்டி வீதி மற்றும் நீர் கொழும்பு வீதி அடங்கலாக கொழும்புக்குள் வாகனங்கள் நுழையும் சகல வீதிகளிலும் இதற் காக விசேட நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப் படும் நிலையங்களில் கட்டணத்துக்கான பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன், அந்தப் பற்றுச் சீட்டை வாகனங்கள் கொழும்பு நகரிலிருந்து வெளி யேறிச் செல்லும் வரை கவனமாக வைத்திருக்க வேண் டிய நடைமுறை பின் பற்றப்படவுள்ளது.

2014 ஆம் ஆண்டுக் கான வரவு -செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான யோசனைகள் கோரப்பட்ட நிலையில், கொழும்பு மாநகர சபையின் வருமானத்தை அதிகரிக் கும் வகையில் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த இராணுவமா? அறிக்கை தயார்



பொதுமக்களது ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கு இராணுவத்தை பயன்படுத்துவது தொடர்பில் சட்ட ரீதியான விடயங்களை ஆராய நியமிக்கப்பட்ட குழு அறிக்கை தயாரித்துள்ளது.

பொதுமக்களது ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கு இராணுவத்தை பயன்படுத்துதல் தொடர்பிலுள்ளள்ள சட்ட ரீதியான விடயங்களை ஆராய்வதற்காக இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவினர் தயாரித்த அறிக்கை தொடர்பில் விசேட அறிவித்தலை இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் அடுத்த வாரங்களில் வெளியிடவுள்ளது.

ரத்துபஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப் பாட்டத் தின்போது இராணு வத்தை பயன்படுத்திய சம்பவத்தைஅடிப்படையாகக்கொண்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் பொது மக்களது ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக இராணுவத்தினரை பயன் படுத்துவது சரியான நடவடிக்கை அல்ல என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (ச)


வட மாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரு அலகாகப்பிரித்து கூடுதல் நிதியைப் பெற்று மாவட்ட அபிவிருத்தி வேலைகளை உறுதியுடன் முன்னெடுப்போம்

சூசைமுத்து
அலெக்ஸ்சாண்டர்(சாள்ஸ்)

உரிமை சிறக்க
சேவை சிறக்க

EPDP ஈழ மக்கள் ஜனநாயக கட்சி


# மீண்டும் ஆரம்பித்தது அரச பஸ் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி முக் கொம்பன் வழியாக அக்கராயன் வரை செல்லும் அரச பஸ் சேவை மீண்டும் கடந்த வாரத்திலிருந்து இடம்பெற்று வருகின்றது.

பூநகரி 10 ஆம் கட்டைக்கும் முக் கொம்பன் கிராமத்துக்கும் இடை யிலான வீதி புனரமைக்கப்பட்டு வந்த தன் காரணமாகக் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இந்த பஸ் சேவை இடம் பெறவில்லை.

இதனால் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் பெரும் இடர்களை எதிர் கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் வீதி வழியாக அரச பஸ் மீண்டும் தனது சேவையைத் தொடங்கியுள்ளது.

பூநகரிக்கும் அக்கராயனுக்கும் இடையில் உள்ள வீதி சிறந்த முறையில் அமைக்கப்பட்டால் தமது போக்கு வரத்துச் சிரமங்கள் நீங்குமென்பது இங்குள்ள மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-18)


வேலையாள்கள் தேவை

multi center ஒன்றுக்கு யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ள கணினி அறிவுள்ள பெண்கள் தேவை.

தொடர்பு:- 075 7276413



ஏல விற்பனைக்கு

அந்திரான் முருகமூர்த்தி கோயில் நவாலி ஆலய உள் வீதியிலுள்ள கூரைப் பொருள்கள் (ஊசிக்கால், வளை, மரம், சிலாகை, ஓடு) மொத்தமாக 25.09.2013 அன்று மாலை 4.00மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:- 0776171457, 0776136521



Sri Lankan Chartered [இலங்கை பட்டயக்கணக்காளர் ] கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
அதி சிறந்த வசதிகளுடன் கூடிய முற்றிலும் மாறுபட்ட முறையில்

CA The Institute of Chartered Accountants of Sri Lanka

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

K-AIMS
JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான தேர்தலுக்கு சாத்தியங்கள் குறைவே

## சர்வதேச கண்காணிப்பாளர்களிடம் கூட்டமைப்பு

வடக்கில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றன. வன்னியில் தமிழ் மக்களின் வாக்களிப்பு விகிதாசாரத்தைக் குறைக்க இராணுவத்தினரும், அரச தரப்பினரும் திரைமறைவில் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் - என்று சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் நேற்று நேரடியாக முறையிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

எனவே வட மாகாணசபைத் தேர் தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற சர்வதேச கண் காணிப்பாளர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்றும் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிக்க தேர்தல்கள் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள சார்க் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு பிரிவு பிரதிநிதிகளையும், பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களையும் நேற்றுக் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்துக் கலந்து ரையாடியது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், "மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிக்க இலங்கை வந்துள்ள சார்க் அமைப்பின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவு பிரதிநிதிகளை கலதாரி ஹோட்டலில் இன்று (நேற்று) காலை 10.30 மணியிலிருந்து 11 மணி வரை சந்தித்துக் கலந்துரையாடினோம். அதேவேளை, பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை சினமன் கிராண்ட் ஹோட்டலில் பிற்பகல் 1.30 மணியிலிருந்து 3 மணி வரை சந்தித்துக் கலந்துரையாடினோம்.

இதன்போது வடக்கில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றன என்று அவர்களிடம் கூறியதுடன், அதற்குரிய காரணங்களையும் விளக்கினோம்.

வடக்கில் இராணுவப் பிரசன்னம், ஆயுதக்குழுக்களின் அடாவடித்தனம் குறைந்தபாடில்லை. இதுதொடர்பில் ஜனாதிபதிக்கும் கடிதம் மூலம் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் அறிவித்துள் ளார் என்றும் தெரிவித்தோம்.

கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு இராணுவத்தினர் மற்றும் ஆயுதக் குழுக்களினால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள், ஆளும்தரப்புக்குத் தான் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி) வாக்களிக்கவேண்டும் என்று வடக்கில் மக்களின் வீடுகளுக்குச் சென்று இராணுவப் புலனாய்வாளர்கள் விடுக்கும் மிரட்டல்கள், வன்னியில் தமிழ் மக்களின் வாக்களிப்பு விகிதாசாரத்தைக் குறைக்க இராணுவத்தினரும், அரச தரப்பினரும் திரைமறைவில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தோம்.

தீவகத்தில் இதுவரை சுதந்திரமான தேர்தல் நடைபெறவில்லை என்றும், ஆயுதக்குழுவைச் சேர்ந்த கட்சி ஒன்றினதும், இராணுவத்தினரினதும் நிர்வாகம்தான் அங்கு இடம்பெறுகின்றது என்றும் சுட்டிக்காட்டினோம்.

வடக்கில், முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநரே தேர்தல் பரப்புரைக் கூட்டங்களின் மேடைகளின் ஏறுகின்றார் என்றும், மாகாணசபைத் தேர்தல் சட்டங்கள் அங்கு தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன என்றும், இதனைத் தடுத்துநிறுத்த தேர்தல் ஆணையாளரின் கையில் அதிகாரங்கள் இல்லாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் நாம் இந்தச் சந்திப்பின் விளக்கினோம்.

இராணுவத்தினர் மற்றும் ஆயுதக் குழுக்களின் தலையீடுகள், வாக்கு மோசடிகள், வன்முறைகள் எதுவுமின்றி வடக்கு மாகாணசபைத் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற வேண்டும் என்றே கூட்டமைப்பு விரும்புகின்றது. எனவே, சர்வதேச கண்காணிப்பாளர்களாகிய நீங்கள் இந்த விடயங்களில் உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம்" என்றார் சுமந்திரன்.

இந்தச் சந்திப்புகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ங-சி)

# ரயில் கட்டணம் உயர்வதற்கு உடனடிச் சாத்தியம் இல்லை

## போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, செப். 16

இன்றோ, நாளையோ ரயில் கட்டணங்களை அதிகரிக்கும் எந்தவொரு ஆயத்தமும் இல்லை என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அலுவலக நேரங்களில் - காலை 8 மணிக்கு முன்னரும் - மற்றும் மாலை 4 மணிக்கு முன்னரும் என்றவாறு சலுகைக் கட்டண முறைமையொன்றின் கீழ் ரயில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு ரயில்வே திணைக் களத்தினரால் ஏற்கனவே திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

> ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் ரயில்வே திணைக்களம் நட்டமடைந்துள்ளது.

அனேகமாக இந்தத் திட்டம் அடுத்த மாதத்துக்குள் அனைத்து ரயில் மார்க்கங்கள் தொடர்பாகவும் அறிமுகப் படுத்தப் படவிருப்பதாக ரயில்வேத் திணைக்களத்தின் உள்ளகத் தகவல் மார்க்கங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இந்த சலுகைக் கட்டணத் திட்டம் கொழும்பு - மீரிகம ரயில் மார்க்கத்தில் நடைமுறையில் உள்ளது. இந்தச் சேவையில் சாதாரண கட்டணத்தை விட நூற்றுக்கு 40 வீதம் குறைவாக இதன்போது கட்டணங்கள் அறவிடப்படு கின்றன.

அலுவலக நேரங்கள் அல்லாத சாதாரணமான நேரங்களில் ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை மிகக் குறை வாக இருப்பதால் ரயில்வேத் திணைக்களத்தின் நட்டம் அதி கரிப்பதற்கும் இது முக்கிய காரணமாக அமைவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ-22)

### இந்திய வீடுகளை அமைப்பதற்கு

# வழங்கப்படும் நிதி போதாததால் கடன்களைப் பெறும் பயனாளிகள்

கிளிநொச்சி, செப். 16

இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் வீடுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி போதாமையால் கடன்களைப் பெற்றே தாம் வீட்டு வேலைகளை நிறைவு செய்து வருவதாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீடுகளை அமைக்கும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இங்குள்ள மலையாளபுரம் கிராமத்தில் 304 வீடுகளும், கிருஷ்ணபுரம் கிராமத்தில் 239 வீடுகளும் , பொன் நகர் கிராமத்தில் 242 வீடுகளும், அம்பாள் நகர் கிராமத்தில் 370 வீடுகளும், இராமநாதபுரத்தில் 297 வீடுகளும் சிவிக்சென்ரர் கிராமத்தில் 58 வீடு களும், மருதநகர் கிராமத்தில் 73 வீடுகளும், பன்னங்கண்டியில் 25 வீடுகளும், உருத்திரபுரம் வடக்கில் 155 வீடுகளும், பெரிய பரந்தனில் 86 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின் றன.

இந்த வீடுகளின் பெரும்பாலான பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. ஆனால் வீட்டுத் திட்டப் பணிகளுக்கென வழங்கப்படும் நிதி போதாமையால் பல்வேறு கடன்களைப் பெற்றுத் தாம் வீடுகளை அமைத்து வருவதாகப் பயனாளிகள் தெரிவித்தனர். (க-6)

# மாணவர்கள் பாத யாத்திரையில்

கொழும்பு,செப்16

ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அமைதியான முறையில் பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 22 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைக்கு எதிராக அவர்கள் பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மாணவர்கள் தற்போது ரஜரட்ட பல்கலைக்கழகத்திலிருந்து அநுராதபுரம் நகரப்பகுதி வரை பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளனர். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மக்களின்

நாம் சர்வதேசத்திடம் இதனைத் தெரிவிப்போம். இந்த அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஒத்துழைக்கவில்லை என் பதனைத் தெரிவிப்போம்.

ஆளும் வர்க்கத்தின் இத்தனைய கெடுபிடிகளால் தான் ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இனியும் இப்படிச் செய்தால் மீளவும் ஆயுதம் ஏந்த வேண்டிய ஒரு நிலைமை ஏற்படலாம்.

இராணுவம் போர் முடிந்த பின்னர் இந்தப் பகுதியில் 4 வருடங்களாக இருப்பதற்கான காரணம் காட்ட வேண்டும். காரணமில்லாமல் வைத்திருக்கின்றார்கள் என்றால், அடிமையாக்கி, எங்களை கால்களில் நசுக்கி வைத்திருக்கின் றார்கள் என்று அர்த்தம்.

இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றும் சகல உரித்துகளும் மக்களுக்கு உண்டு. எங்களுக்குத் தேவையில்லாத இராணுவம் எங்களை அடக்கியாள இங்கே இருக்க முடியாது. மக்கள் ஆணையைப் பெற்று அவர் களை வெளியேற்றுவோம். அரசு ஒத்துழைக்க மறுத்தால் ஐ.நா. வரையிலும் செல்வோம் - என்றார். (ஒ-5)

### ஏற்கமுடியாத

அவர்கள் எமது தேர்தல்விஞ்ஞாபனத்தை முழுமையாகப் படிக்கவில்லையென்று நினைக்கின்றேன்.

நாம் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே தீர்வை முன்வைத்துள்ளோம். அவர்களுக்கு உறுதி கொண்டிருப்பது எல்லாம் சுய நிர்ணய உரிமைதான். எமது தேர்தல் விஞ்ஞாபனம் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டது

சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவுறுத்தியுள்ளோம்.

ஒரு நாட்டின் அரசியல் சாசன அடிப்படையிலான மக்கள் குழாம் சிவில், அரசியல், பொருளாதார, கல்வி சார் விடயங்கள் தொடர்பில்தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வது உள்ளக சுயநிர்ணயம்.

வெளியக சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றியே பேசுகிறது.

நாங்கள் பெரும்பான்மை இனத்துக்கு அடிமைகளாக வாழ முடியாது. எங்களுக்கு போதியளவு அதிகாரம், சுயாட்சியும் வழங்கப்பட வேண்டும்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு அறிக்கை, பல்லினநிபுணர்குழுஅறிக்கை,மஹிந்த - பான் கீ - மூன் கூட்டறிக்கை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை என்பவற்றில் கூட உச்சக்கட்ட அதிகாரப் பகிர்வு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதனை ஜனாதிபதி செயற்படுத்தினாரா?

தமிழ் மக்கள் தொடர்பில் என்ன அரசியல் தீர்வு தேவை என்பதை நாம் முன் வைத்திருக்கின்றோம்.நாங்கள் முன் வைத்த தீர்வை எப்படி அடையப் போகின்றோம் என்பததையும் குறிப்பிட்டுள்ளோம். ஜனாதிபதி, தமிழ் மக்களுக்கு என்ன தீர்வைத் தரப்போகின்றார் என்பதை முதலில் முன்வைக்கட்டும்.

சர்வதேசத்தின் பங்களிப்புடனேயே எங்களின் தீர்வு எட்டப்படும் - என்றார். (ங-5)

### கூட்டமைப்பின்

கலந்துகொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. கூட்டம் நடைபெறும் இடத்துக்கு முன்பாக இராணுவக் காவலரண் ஒன்றும் இருந்தது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஒலிபெருக்கியில் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. இதன்போது குறித்த சிலர் சிவில் உடையில், கூட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்றுள்ளனர். "அனுமதி பெறாமல் கூட்டத்தை நடத்த முடியாது" எனத் தெரிவித்த சிவில் உடைதாரிகள் அங்கிருந்த மக்களை விரட்டியடித்துள்ளனர்.

"அடாவடித்தனமான இந்தச் செயல் குறித்து யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்திலும், பவ்ரல் அமைப்பிலும் முறைப்பாடு செய்தோம். உடனடியாக அவற்றின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து நிலைமைகளை ஆராய்ந்தனர்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பா.கஜதீபன் உதயனுக்குத் தெரிவித்தார். இராணுவத்தினரே சிவில் உடையில் வந்து தம்மை விரட்டினர் என பொதுமக்கள் தெரிவித்ததாக கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

அதன் பின்னர் தேர்தல் திணைக்கள அதிகாரிகளின் பிரசன்னத்தோடு கூட்டம் நடைபெற்றது. (ங-5)

### தமிழகத்துடன்

களை மட்டும் பிரசுரித்துள்ளார்.

தமிழக இளைஞர் - யுவதிகளின் போராட்டம்தொடர்பில்நான்மகிழ்ச்சியடைகிறேன். இவர்களது போராட்டத்தால் எங்களுக்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன. அங்குள்ள கட்சிகள் எமது பிரச்சினையை தமது சுய நலத்துக்காகப் பயன்படுத்தக் கூடாது என்று மட்டுமே சொன்னேன். ஏன் இவ்வாறு கூறினேன் என்றார், ரென்னிஸ் பந்து போன்று நமது பிரச்சினைகளை மாறி மாறி மாறி பந்தாடிக் கொண்டிருக்கின்றனர்.

கணவன் - மனைவி பிரச்சினையில் மூன்றாம் நபர் தலையிட்டு விவாகரத்துச் செய்யுங்கள் என்று கூறக்கூடாது. அதே போன்று எமது பிரச்சினையில் வெளியில் உள்ளவர்கள் தலையிட்டு, பிரிந்து போவது தான் தீர்வு என்று சொல்லக் கூடாது.

தமிழக மக்களோடு எனக்கு எந்தப்பிரச்சினையும் இல்லை. தமிழக மக்களின் உதவியும் ஆதரவும் எமக்கு எப்போதும் தேவை. விரைவில் கூட்டமைப்பின் தலைமையில் அமையவுள்ள வட மாகாண சபை கூட பலவிதங்களில் தமிழகத்துடன் இணைந்து நெருக்கமாகச் செயற்படும் - என்றார். (ங-5)

### இன்னும்

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைபெறும் சம்பவங்களையும் கிடைக்கும் தகவல்களையும் வைத்துப் பார்க்கும் போது வடக்கில் இன்னும் அதிக படையினரை கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்றே தோன்றுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் விக்னேஸ்வரன் தேர்தல் பரப்புரை மேடைகளில் பிரபாகரன் ஒரு பெரும் வீரன் அவரால் தான் தமிழினத்துக்கே பெருமை கிடைத்தது என்றும், அவர் எந்த இடத்தில் போராட்டத்தை விட்டாரோ அந்த இடத்தில் இருந்து தாங்கள் அதனை தொடரப் போவதாகவும் கூறியுள்ளார். புலிகளின் சித்தாந்தம் இன்னமும் உயிர்ப்புடன் இருக்கிறது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்று அவர்கள் இன்னமும் நினைக்கிறார்கள் இத்தகைய கருத்துக்களால் அச்சுறுத்தல் இன்னமும் பெரிய அளவில் இருந்து வருவது தெரிகின்றது. இந்த நிலைமையில் ராணுவத்தை குறைப்பதை விடுத்து அதிக ராணுவத்தினரை அனுப்பும் படியும் புதிய முகாம்களை அமைக்கும் படியும் பாதுகாப்பு செயலாளரைக் கோருவது பற்றி ஆலோ சித்து வருகின்றேன்.

கடந்த 25 வருட காலமாக இங்கு ஒரு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றதில்லை. அப்படியான ஒரு சந்தர்ப்பம் வழங்கும்போது இதைத்தான் அவர்கள் செய்ய முற்படுகிறார்கள். விக்னேஸ்வரனும் கூட்டமைப்பும் ராணுவத்தை வில்லன் போல காட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த விக்னேஸ்வரன் தமது வாழ்நாளில் தமிழ் மக்களுக்காக என்ன செய்திருக்கிறார்? என்பதே எனது கேள்வி. காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் புலி உறுப்பினர்களோ அவர்களின் உறவினர்களோ தமது வழக்குகளை விக்னேஸ்வரன் விசாரிப்பதை விரும்பியதில்லை. ஏனெனில் அவர் இரக்கமே இல்லாமல் கடும் தண்டனை விதிப்பவர் என்று அவர் கருதப்பட்டார். இதே விக்னேஸ்வரன் தான் இப்போது தமிழ் மக்களின் இரட்சகர் என்று கூறிக்கொள்கிறார் - என்றார்.

### சர்வதேசப்

களை நேரில் ஆராயவுள்ளனர்.

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான தேர்தல் பரப்புரைகள் வடமாகாணத்தில் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந்த நிலையில் இலங்கையில் அமைந்துள்ள தூதரகங்களின் பல்வேறு பிரதிநிதிகளும் வடக்குக்கு இந்த வாரம் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சமர் 'உதைபந்து' றோயல், நக்கீரன் வாகை



யாழ்ப்பாணம், செப்.16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாண சமர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நக்கீரன் விளையாட்டுக்கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நக்கீரன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
பின்னர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான கலா விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், செப்.16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.45 மணி
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் குப்பிளன் விக்னேஸ்வரன் விளையாட்டுக்கழகம். (23)
---------
யாழ்ப்பாணம், செப்.16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
பி.ப. 3 மணி
பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்.
பி.ப. 4 மணி
நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி (ங-23)
----------
மாங்குளம், செப்.16
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு
வரும் உதைபந்தாட்டத் தொடா வதிரி பொம்மோஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் இன்றைய ஆட்டமாக 4.30 மணிக்கு நாவாந்துறை சென்மோஸ் அணியை எதிர்த்து விண்மீன் ஏ அணி மோதவுள்ளது.
மாங்குளம் (ங-422)

## தேசிய மட்ட மரதனில் கிளி. மாணவன் சாதனை



வலி வடக்கு செப் 16
சுமார் எட்டு வருடகால இடைவெளியின் பின்னர் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவன் ஒருவர் அரை மரதன் ஓட்டத்தில் தனது மாவட்டத்தின் புகழை மீண்டும் பதிவு செய்துள்ளார்.
அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான அரை மரதன்(26 கிலோ மீற்றர் தூரம்) ஓட்டப் போட்டி நேற்று காலையில் பாணந்துறை ஸ்ரீ சுமங்கலா ஆண்கள் கல்லூரியில் ஆரம்பமானது. இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரி வீரன் தேவராசா அன்ரன் எட்மன் குறிப்பிட்ட தூரத்தை ஒரு மணித்தியாலம் 16 நிமிடம் 05 செக்கனில் ஓடி இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார். இதன் மூலம் மீண்டும் நீண்ட கால இடைவெளியின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தை விளையாட்டுத்துறையில் தலை நிமிரச் செய்துள்ளார் அன்ரன் எட்மன். (ங-86)

## ஸ்ரீமுருகன் அதிரடிக்கு பணிந்தது பொற்பதி

யாழ்ப்பாணம், செப்.16
அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 8 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட 8 பேர் பங்கு கொள்ளும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடியமல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றனர்.
இதில் தனு 47 ஓட்டங்களையும் கவி 15ஓட்டங்களையும்தமதுஅணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி சார்பில் சுபாஸ் 2 இலக்கினையும், சுமன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.
80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பொடுத்தாடிய கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களை மட்டும் பெற்று 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இதில் றொக்சன் 21 ஓட்டங்களையும், நவநீதன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் மல்லாம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி சார்பில் கௌதம் 2 இலக்கினையும் கபில் தேவ் 1 இலக்கினையும் வீழ்த்தினர். (ங-23)

# நவசக்தி வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள்



பருத்தித்துறை, செப்.16
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:

**12 ஆம் திகதி ஆட்டங்கள்**

முதல் போட்டியில் வல்வை அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் முதல் கோலைப் போட்டார். ஆனால் அதற்குப் பதிலடியாக 8 ஆவது நிமிடத்தில் வல்வை அணி வீரர் தாஸ் கோலை ஒன்றை பெற ஆட்டம் விறுவிறுப்படைந்தது. இருந்த போதும் பொம்மர்ஸ் அணி சார்பில் 14 ஆவது நிமிடத்தில் சாரங்கனும், 28 ஆவது நிமிடத்தில் கோபியும் அடுத்தடுத்து கோலை அடிக்க 3:1 என்ற கோல் கணக்கில் பொம்மேர்ஸ் அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் ஆட்டத்தை தம்பக்கம் வைத்திருந்த பொம்மேர்ஸ் அணி வீரர்கள் 33 ஆவது, 35 ஆவது, 39 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து வெற்றிக் கோல்களைப் போட்டு அசத்தினார்கள். இதன்பின்னர் ஆட்டம் நிறைவுக்கு வர 6:1 என்ற கோல் கணக்கில் பொம்மேர்ஸ் அணி வெற்றி பெற்றது.
அடுத்த போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் அணி மோதியது. இதில் முதல் 22 ஆவது நிமிடத்தில் சென் பீற்றர்ஸ் அணி வீரர் நிசாந்தன் 2 ஆவது நிடத்தில் முதல் கோலைப் போட றோயல் அணி வீரர்கள் தமது ஆட்டத்தை விரைவுபடுத்தினர். இதனால் அந்த அணி சார்பில் 18 ஆவது நிமிடத்தில் கஜகோபனும், 22 ஆவது நிமிடத்தில் சாருஜனும், 28 ஆவது நிமிடத்தில் கஜகோபனும் அடுத்தடுத்து கோல்களைப் போட இடைவேளைக்கு முன்னர் 3:1 என்ற கோல் கணக்கில் றோயல் அணியினர் முன்னிலை வகித்தனர்.
இடைவேளையின் பின்னர் றோயல் அணியின் ஆட்டத்தில் அனல் பறந்தது. 32 ஆவது நிமிடத்திலும் கஜகோபனும், 37 ஆவது நிமிடத்தில் கலிஸ்ரும் அடுத்தடுத்து கோல்களைப் போட்டு அடித்தனர். இறுதியில் றோயல் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**13 ஆம் திகதி ஆட்டங்கள்**

முதல்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் 'பி' அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி கோல் மழைகளைப் பொழிந்து 11:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் இந்த அணி சார்பாக 8 ஆவது நிமிடத்தில் நிதர்சன் 10 ஆவது நிமிடத்தில் நிக்சன் 14, 15 ஆவது நிமிடங்களில் ஜனாட், 19, 22 ஆவது நிமிடங்களில் நிதர்சன் 24, 26 ஆவது நிமிடங்களில் சாள்ஸ் 33, 37 ஆவது நிமிடங்களில் நிரோஜன் 40 ஆவது நிமிடத்தில் நிதர்சன் என கோல்கள் போட அந்த அணி வெற்றி பெற்றது.
அடுத்த போட்டியில் நவிண்டில் கலைமதி 'பி' அணியை எதிர்த்து இளவாலை யங் கென்றிஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் மிகவும் வேகமாக மோதின. ஆட்டம் இரு அணிகள் பக்கமும் சாய்ந்து சாய்ந்து சென்றது. இதனால் இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது, வேகம் உச்சக்கட்டத்தை எட்டியது. இரு அணிகளின் பின்கள வீரர்களாலும் கோல் காப்பாளர்களின் சாதூரியங்களாலும் கோல்கள் போடுவதில் இரு அணிகளும் சிரமப்பட்டன. பார்வையாளர்களிற்கு இந்தப்போட்டி இறுதியாட்டம் போல் கண்களிற்கு விருந்தாக அமைந்தது.
இறுதியில் ஆட்டம் முடிவதற்கு இரு நிமிடங்கள் உள்ளபோது கலைமதி 'பி' அணி வீரர் அபி ஒருகோலைப்போட ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இறுதியில் கலைமதி 'பி' அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**14 ஆம் திகதி ஆட்டங்கள்**

சக்கோட்டை சென்சேவியர் 'ஏ' அணியை எதிர்த்து கரவைச் சுடர் அணி மோதியது. சென். சேவியர் அணி வீரர்கள் 15 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதையை மதனும், 25 ஆவது நிமிடத்தில் கனியூட்டும் கோல்களாக அடிக்க கரவை சுடர் அணியில் 29 ஆவது நிமிடத்தில் நதுசனும் ஒரு கோல்போட 2:1 என்ற கோல் கணக்கில் இடைவேளைக்கு முன்னர் அந்த அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் இரு அணிகளும் பலமாக மோதிய போதும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் சென் சேவியர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அடுத்த போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து பூமகள் அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய 5 ஆவது நிமிடத்தில் பூ மகள் அணியின் லங்கா ஒரு கோலைப் போட அதன் வெற்றிக்களிப்பை அதிக நேரம் கொண்டாட விடாது. 6 ஆவது நிமிடத்திலேயே குப்பிளான் விக்னேஸ் வரா வீரர் பாணுஜன் கோலைப் போட்டு சமப்படுத்தினர்
இடைவேளையின் பின்னர் பூமகள் அணியைச் சேர்ந்த வீரர்கள் 32 ஆவது நிமிடத்தில் ஜெயராச், 35 ஆவது நிமிடத்தில் பிரதீபன் ஆகியோர் அடுத்தடுத்து ஒவ்வொரு கோல்களையும் போட்டனர். இதனால் ஆட்ட நேர முடிவில் பூமகள் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ங-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கேயின் ஹட்ரிக் வீண்

## இங்கிலாந்திடம் அடிவாங்கியது ஆஸி அணி

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் திரில் வெற்றியைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் நான்காவது ஆட்ட்ம் கார்டிப் மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 48.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டநாயகனாக ஜொஸ் பட்லர்

முதலாவது பந்திலேயே முதலாவது இலக்கை இழந்த ஆஸி அணி, சீரான இடைவெளியில் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து கொண்டேயிருந்தது. 57 ஓட்டங்களுக்கு நான்கு இலக்கு களை இழந்து தடுமாறிய ஆஸ்திரேலிய அணியை பெய்லியின் ஆட்டம் மாற்றியமைத்தது. மத்தியூ வேட், வோகஸ் இருவரும் பெய்லியுடன் சிறப்பான இணைப்பை வழங்கி கௌரவ இலக்கை நோக்கி அழைத்துச் சென்றனர்.

இருப்பினும் பின்கள வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப, ஆஸ்திரேலிய அணி 48.2 பந்துப் பரிமாற் றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 227 ஓட்டங் களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜோர்ஜ் பெய்லி 91 பந்துகளில் 87 ஓட்டங்களையும், மத்தியூ வேட் 40 பந்துகளில் 36 ஓட்டங்களையும், அடம் வோகஸ் 52 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ட்ரெட்வெல் 3 இலக்குகளையும் ஸ்டீவன் பின், போய்ட் ராங்கின் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

228 ஓட்டங்கள் என்ற சுலப வெற்றி இலக்கை விரட்ட களமிறங்கியது இங்கிலாந்து. இருப்பினும் இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் மக்கேய் . 3 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் முதல் 3 பந்துகளிலும் 3 இலக்குகளைக் கைப்பற்றி ஹட்ரிக் சாதனை படைக்க இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களுடன் தடுமாறியது. 4 ஆவது இலக்குக்காக 104 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகள் இழக்கப்பட்டு 6 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களுடன் அந்த அணி தடுமாறியது. எனினும் ஜொஸ் பட்லர் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றுக் கொர்டுத்தார்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொஸ் பட்லர் 48 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், மைக்கல் கர்பெரி 95 பந்துகளில் 63 ஓட்டங்களையும் மோர்கன் 92 பந்துகளில் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளின்ட் மக்கேய் 4 இலக்கு களையும், ஜேம்ஸ் போள்க்னர், ஷேன் வொற்சன், நதன் கோர்ட்டர் நீல் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.


ஆட்டநாயகனாக ஜொஸ் பட்லர் தெரிவானார்.

இதுவரை இந்தத் தொடரில் 2 ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், 4 ஆட்டங்கள் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

(5)




இந்தத் தொடரில் 2 ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், 4 ஆட்டங்கள் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வரலாற்று வெற்றி

## கத்துக்குட்டியிடம் கவிழ்ந்தது பாகிஸ்தான்




அனுபவ அணியான பாகிஸ்தானை தனது சொந்த மண்ணில் வீழ்த்தி சிம்பாப்வே அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. பாகிஸ்தானு டனான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 24 ஓட்டங்களால் திரில் வெற்றியைப் பெற்றே இந்தச் சாதனையைப் படைத்துள்ளது.

12 ஆண்டுகளின் பின்னர் சிம்பாப்வே அணி இந்த டெஸ்ட் வெற்றியைப் பெற்றுள்ளது. சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணி விளை யாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றியைப் பெற்றிருந்தது.

இரண்டு ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது சிம்பாப்வே அணி.

ஹராரே விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி மஸகட்ஸாவின் 75 ஓட்டங்கள், பிரென்டன் ரெய்லரின் 51 ஓட்டங்களின் துணையோடு 294 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜுனைட் கான் 4 இலக்குகளையும் அப்துர் ரெஹ்மான் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன் னிங்ஸில் யுனிஸ் கானின் 77 ஓட்டங்கள், மன்சூரின் 51 ஓட்டங்கள், துணையோடு தட்டுத் தடுமாறி 230 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக பிரையன் விற்றோரி 5 இலக்குகளையும் பணி யங்கர 3 இலக்கு களையும் கைப்பற்றினர்.

64 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த நிலையில் தனது இரண் டாவது இன்னிங்ஸில் ஆடிய சிம்பாவே அணி மாவோயோவின் 58 ஓட்டங்கள், மஸகட்ஸா 44 ஓட்டங்களின் துணையோடு 199 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக அலி 5 இலக்குகளையும் சயீட் அஜ்மல், அப்துர் ரெஹ்மான் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

264 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 239 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 24 ஓட்டங்களால் தோல்விய டைந்தது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும் மன்சூர் 54 ஓட்டங்களையும் யுனிஸ் கான் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக ரென்டாய் சத்தர 5 இலக்குகளையும் [illegible] 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ரென்டாய் சத்தர வும் இந்தத் தொடரின் நாயகனாக யுனிஸ்கானும் தெரிவாகினர். 2 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(5)




ஆட்ட நாயகனாக ரென்டாய் சத்தர வும் இந்தத் தொடரின் நாயகனாக யுனிஸ்கானும் தெரிவாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவராகும் தவான்

சம்பியன்ஸ் லீக் 20/20 தகுதிச் சுற்றில் களமிறங்கும் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் தலைவராக அதிரடி வீரர் ஷிகர் தவான் நியமிக்கப்பட்டுள்ளார்.
ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் 20/20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் வருகிற 21 ஆம் திகதி தொடங்குகிறது.
இதில் இந்தியாவில் இருந்து மும்பை, சென்னை, ராஜஸ்தான் என்று மூன்று அணிகள் பங்கேற்கவுள்ளன.



தவிர, ஆஸ்திரேலியாவின் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ், பிரிஸ்பேன் ஹீட், மேற்கிந்திய தீவுகளின் டிரினிடாட் அண்டு டுபாகோ உள்ளிட்ட 8 அணிகள் நேரடியாக பங்கேற்கும்.

எதிர்வரும் செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடக்கவுள்ள தகுதிச் சுற்றின் மூலம் மீதமுள்ள 2 அணிகள் தெரிவு செய்யப்படும். இதில் ஐதராபாத் (இந்தியா), ஒடாகோ வோல்ட்ஸ்(நியூசிலாந்து), கந்துரட்ட மரூன்ஸ் (இலங்கை) மற்றும் பாகிஸ்தானின் பைசலாபாத் வால்வ்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்நிலையில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியின் தலைவராக ஷிகர் தவான் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை உள்ளூர் 20/20 சாம்பியன் கந்துரட்ட மரூன்ஸ் அணிக்காக குமார் சங்கக்கரா களமிறங்க உள்ளதால், இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### பொன்னையா பாலசிங்கம்



ஈஸ்வரி வீதி மயிலிட்டியை நிரந்தர முகவரியாகவும் மயிலியதனை தொண்டமானாற்றை தற்காலிக முகவரியாவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் அவர்கள் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.09.2013) திங்கட்கிழமை பி.ப. 5 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தொண்டமானாறு மயிலியதனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

வேலை வாய்ப்பு
யாழ் நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
(பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்புகளுக்கு - 0773614572

TATA 207 DI Single Cap விற்பனைக்கு
PR - 8XXX இலக்கம். பிற்பகுதி கொழும்பு அலுமினியம் பொடி (Body) 23000 k.m. வெள்ளை நிறம் மிக நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு: 0776306733, 0212250186

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து
English Diploma veta
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
Foundation ENGLISH — அடிப்படை ஆங்கிலம், ஆங்கிலம்படிக்க எழுத தெரிந்து கொள்ளவிரும்பும் ஆரம்ப நிலையினர்க்கான பாடத்திட்டம்.
Diploma in Fluent English Part - I — தாங்கள் பெற்றுள்ள ஆங்கில அறிவில் சந்தேகம் உள்ளவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கான பாடத்திட்டம்
Diploma in Fluent English Part - II — ஆங்கில சொற்களின் ஆழ்ந்த அறிவும் (புலமையும்) மற்றும் ஆளுமையுடன் புதுமையாக பேச விரும்பும்- பேச்சாளர்களுக்கான பயிற்சித் திட்டம்.
ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்
IELTS • Unique Test Tips • Latest Materials
A1, A2, B1, B2
DMI COMPUTER EDUCATION
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-2262470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-2270775
சுன்னாகம் K. K. S. வீதி. ( NSB வங்கி அருகில்) .Tel.:021-224 1970

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது Certificate அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...
• An international language, the language of culture
• A language for education, a language for job market
• A language that is fun to learn
➢ Just say "Yes, I can... speak French"
குறிப்பு: தற்போது A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...
புதிய வகுப்பு மிக விரைவில்... உடன் பதிவு செய்யவும்...
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

தற்போது யாழ் நகரில்... edexcel UNIVERSITY OF WOLVERHAMPTON
சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்
BTEC HND in Computing & Systems Development
• நவீன உலகின் தொழிற்சந்தை வாய்ப்பு மற்றும் மாற்றங்களை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநெறிக் கட்டமைப்பு
• உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை (Job Oriented) உறுதிப்படுத்தும் முழு நேர தீவிர பயிற்சி நெறியுடன் கூடிய கற்கை நெறி
• நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
• BCAS Campus இன் Colombo தலைமையகத்திலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்
பதிவு செய்யும் முதல் 25 மாணவர்களுக்கு ஆரம்பக் கட்டணம் இலவசம்
www.bcas.lk ISO 9001:2008 CERTIFIED 14 Years of Trust & Excellence in Higher Education
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Macro Ads
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

IDM Nations Campus Since 1981
Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd.
#216, Navalar Road, Jaffna.
Double Diploma
Diploma in Computing +
(Bus. Management, Law, QS, Constru.Mgt)
UNIVERSITY UGC RECOGNIZED AWARDED DEGREE
After the Completion of Any Diploma Course - Convocation at BMICH, Colombo.
FREE "One Day Workshop" with Certificate
Programming with Android, Hardware & Networking, Multimedia
On 25th September 2013 (Wednesday)
SELECTION EXAM
on 19th of September (Thursday) 9:00AM
Call and reserve your seat
தொடர்புகளுக்கு : 021 222 9901 | 077 563 2056

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.